பொங்கல் **கைத்தறி** மலர்

விலை அணா நான்கு.

தறி 3 | கோவை, 15–1–1952. | பாவு 3

தை பிறந்தது

தமிழ் மக்களின் பெருமை மிக்க திருநாள்—பொங்கல் நாள் வந்துவிட்டது. ஆண்டுதோறும் வரும் பொங்கல் நாளைக்காட்டிலும், இவ்வாண்டுப் பொங்கல் நாளுக்கு விசேஷ முக்பத்வம் உண்டு எனப் பலர் கூறுகின்றனர்; எழுதுகின்றனர்.

இவ்வாண்டுப் பொங்கலும், புத்தாண்டும் ஒரு பொதுத்தேர்தலை உடன் அழைத்து வந்திருப்பதாலேயேதான் விசேஷ முக்பத்வம் இருக்கிறதென அதற்கு லட்சணம் கூறுகின்றனர்.

பொங்கல் அழைத்துவந்துள்ள தேர்தல், புதுவாழ்வை—புரட்சிகரமான மாற்றத்தை மக்களுக்கு அளிக்குமென நம்பிக்கை தெரிவிக்கின்றனர். அடுத்த ஐந்தாண்டில் மக்களின் வாழ்வு பசையுள்ளதாக பரிணமித்துவிடும்—அதற்கான அமைப்புக்கு, தேர்தல் மக்களுக்குக் கிடைத்துள்ள பெரும் வாய்ப்பாகும் என்று தத்துவ விளக்கம் ஓதுகின்றனர்.

இத்தனையும் ஏற்றுக்கொள்ளத் தக்கதுதானா என்பது தர்க்கத்திற்குரியதாகும். என்றாலும், அதீத நம்பிக்கையைப் பொங்கலும், புத்தாண்டும் அழைத்து வந்த பொதுத்தேர்தல் மீது கொள்ள முடியாது என்பதை மட்டும் இந்த நாம் எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறோம்.

“தை பிறந்தால் வழிபிறக்கும்” என நம் பெரியவர்கள் பழமொழியாகச் சொல்ல நாம் கேட்டிருக்கிறோம்; கேட்டு வருகிறோம். அதன்படி பிறந்துள்ள தை வழியேதேனும் காட்டியுள்ளதா எனில் “ஓரளவு” ....என்றுதான் தயக்கத்தோடு சொல்ல வேண்டியிருக்கிறது.

இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. இரண்டாவது உலக மகாயுத்தம் முடிந்து ஆறு ஆண்டுகளைத் தாண்டி ஓடியும் கூட, மக்களின் வாழ்க்கைத்தரம் சமாதான கால வாழ்வை எட்டிப் பிடிக்க முடியாமல்போய்—வாழ்க்கைச்செலவுகள் அதிகரித்து—தேவைப்பண்டங்கள் தீண்ட முடியாத எட்டாக் கனிகளாகி—நெருக்கடிகளுக்குமேல் நெருக்கடிகள் முற்றி மக்களின் வாழ்க்கையே தேய்ந்து போயிருக்கும்போது இதைச் செப்பனிட இன்றுள்ள ஏற்பாட்டால் முடியுமா என்ற சந்தேகம்தான் எழுகிறதேயன்றி, நம்பிக்கை தோன்றுவதாகவோ, அதற்கான அறிகுறி தென்படுவதாகவோ காணோம்.

கைத்தறி நெசவாளிக்குத் தொழிலுக்குப் போதுமான நூல் கிடைக்குமென்ற நம்பிக்கை தோன்றவில்லை. உலக நாகரீகத்திற்கு தீபஸ்தம்பமாக விளங்கிய கைத்தறித் துணிக்கு இன்று மார்க்கெட் இல்லை.: அது மேற்கொண்டாவது கிடைக்குமென எண்ணவும் முடிவதில்லை.

வாழ்க்கைச் செலவு வானத்தை நோக்கி வளர்ந்துகொண்டு போகும் இந்நாளில், அவனுக்கு கூலிவெட்டு ஆயுதம் பரிசு தரப்படுகிறது. நூலுக்கு விலை உயர்த்தப்படுகிறது.

சிறு மணி நெல்லைக் குத்தி, தேன் சுவைப் பொங்கல் பொங்கி வசதி நிறைந்த கூட்டம் வயிறு வெடிக்க உண்ணும் இப்பொங்கல் நன்னாளிலேயேதான், பொங்கல் பொங்க வசதியற்று நிற்கும் கைத்தறியாளர்கள் உள்பட ஆயிரமாயிரம் ஏழைக் குடும்பங்களின் கோரக் காட்சியை நாம் பார்க்கிறோம்.

அவர்களின் வாழ்வின் மறுமலர்ச்சிக்கு இப்பொங்கல் அழைத்துவந்த பொதுத்தேர்தல் சிறந்த “டானிக்”காக இருக்குமென எப்படி நாம் நம்புவது?

பெருநிலக்கிழார்களது இல்லங்களிலே—வசதி படைத்தோரின் வயல் வெளிகளிலே—பொங்கல் பொங்கும். அவர்களது மனைவி மக்கள் கைகளிலே புதுவளை குலுங்கி ஒலிக்கும். பொன்னும், அணியும் மினுமினுக்கும். புத்தாடையும், சித்தாடையும் இடையிலேறி அவர்களை எழில்படுத்தும். இன்னும்...........

இந்நிலையை கைத்தறி நெசவாளியினுடைய வீட்டிலே பார்க்க முடிவதில்லை. கரும்பும்; மஞ்சளும் கழுத்தைச் சுற்றிப் பொங்கலுக்குத் தயாராக நிற்கும் பானை அவன் வீட்டிலே இல்லை. பழைய சட்டி—அதுவும் புளியங்கொட்டையை வறுத்து துடுப்படி பட்டு உடைந்துவிட்ட ஓட்டைச் சட்டிதான். கந்தல்ஆடை. பரட்டைத் தலை. தேய்ந்து தேஜசற்றுப் போன அவன் மனைவி. காய்ந்த சருகு போன்ற குழந்தைகள். எல்லாவற்றிற்கும் மேலாக அவனின் ஓரே ஆயுதமான தறியும் அடமானம்.

இந்நிலையில்தான் பொங்கலும், புத்தாண்டும் பொதுத் தேர்தலை கைத்தறி நெசவாளி: சம்பந்தப்பட்ட வரையில் அழைத்துவந்திருக்கிறது.

வரப்போகும் ஐந்தாண்டுத் திட்டத்திலே நாட்டின் கிராமியப் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகித்து நிற்கும் கைத்தறி நெசவுத் தொழிலைப் பற்றியோ அதன் எதிர்காலத்தைப் பற்றியோ ஒரு வார்த்தை கூட சொல்லப்படவில்லை.

நடைமுறையில் பல கோணல் மாணலாக—வசதி படைத்தோருக்கு வளைந்து கொடுக்கும் தன்மையுடையதாகவுள்ள டெக்ஸ்டைல் கொளகையை, ஏக்கமுற்று வாழும ஏழைக் கைத்தறியாளனுக்கு நன்மை பயக்கும் வகையில் திருத்தியமைக்கப் போகிறோமெனக் கூறுவாருமில்லை. இருக்கும் நிலையே நீடிக்குமென்ற நம்பிக்கைதான் எங்கும் காணப்படுகிறது.

ஆகவேதான் வந்துள்ள இவ்வாண்டுப் பொங்கல் வாட்டமுற்றுள்ள லட்சோபலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு வழியமைத்துத் தரவில்லையென நாம் கூறுகிறோம். இந்நிலையில் நம்பிக்கையிழந்து போகவேண்டிய அவசியம் நாட்டுபக்களுக்கோ, குறிப்பாக நெசவாளர்களுக்கோ இருப்பதாகச் சொல்லவரவில்லை.

அதற்குப் பதில் முன்னெச்சரிக்கையாக மக்கள் இருந்து, தங்களின் ஸ்தாபன பலத்தை அதிகப்படுத்திக் கொள்வதன் மூலமே இன்றுள்ள எக்காளமிடும் ஜனவிரோத டெக்ஸ்டைல் கொள்கையை முறியடிக்க முடியுமென நாம் கூறுகிறோம்.

கடந்த காலத்திலிருந்த பிரமையும், வெறும் நம்பிக்கையும் வாழ்வை வளமானதாக்க இப்போது நமக்கு உதவாது என்பதையே இவ்வாண்டுப் பொங்கல் எடுத்துக் காட்டுகிறது. அதன் எதிரொலியும் பேரொலியுமாகவேதான நடைபெற்றுவரும் தேர்தல்களில் பல இடங்களில் மக்கள் முடிவு கூறிவருகின்றனர்.

அம்முடிவு வளரும்; வளர்ந்து கொண்டே போகும். வாழ்க்கையில் புதிய நம்பிக்கை ஒளியை அது மக்களுக்குத் தரும். அந்த வெற்றிப் பாதையை நோக்கி நாட்டு மக்கள் அடியெடுத்து வைக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

அந்த அளவுக்குத்தான் இவ்வாண்டுப் பொங்கல் குறிப்பாக நெசவாளருக்கு உதவியிருக்கிறது எனக்கூறி. பொங்கல் நாளில் எல்லோருக்கும் எமது இதயபூர்வ நல்வாழ்த்தை சமர்ப்பித்துக்கொள்கிறோம். ●

திருச்செங்கோடு கைத்தறி நெசவாளர்

கூட்டுறவு உற்பத்தி, விற்பனைச் சங்கம் லிமிடெட்,

S. No. 523.

(சங்ககிரி R. S.) **திருச்செங்கோடு** (சேலம் ஜில்லா.)

எங்களிடம் 2000 தறிகளிலிருந்து நவீன டிசைன்களில் தயாராகும்
அடியிற்கண்ட ரகங்கள் சரசமான விலைக்குக் கிடைக்கும்.

கோட்டிங், ஷர்ட்டிங் பீசுகள், சலவை, காடா பீசுகள், பெட்ஷீட், சால்வைகள், துண்டு, வேஷ்டித்தான்கள், வெள்ளை, கலர் சேலைகள்.

தேவையுள்ளோர் விபரங்களுக்கு எழுதவும்.

K. A. காசிவிஸ்வநாத முதலியார், தலைவர்.

பருத்தி உற்பத்தி பெருக புதிய சிபார்சுகள்!

பருத்தி உற்பத்தியை அதிகரிக்க சில யோசனைகள் கூறப்பட்டுள்ளன. இத்திட்டப் பற்றி மத்திய பருத்திக்கமிட்டி பிரசுரிக்கும் சஞ்சிகையில் காணப்படும் சில குறிப்புகள் பின் வருமாறு:—

1950—51-ம் வருஷத்தில் 2926000 பேல் பருத்தி (முந்தின வருஷத்திய உற்பத்தி 2628000 பேல்கள்) உற்பத்தியாகுமென்று புதுடில்லியிலுள்ள பொருளாதார புள்ளி விபர இலாகா மதிப்பிட்டது. வர்த்தகத் துறையிலுள்ளவர்களும் மொத்தம 33 லட்சம் பேல் அதாவது முந்திய வருஷத்தைவிட அதிகப்படியாக 3 லட்சம் பேல்கள் கிடைக்குமென்று எதிர்பார்த்தார்கள். பிரஸ்தாப வருஷத்திற்கு 6 லட்சம் பேல்களாவது அதிக உற்பத்தி செய்யப்படவேண்டுமென்று இந்தியசர்க்கார் நிர்ணயித்தார்கள். ஆனால் பருவ மழை தவறியதின் காரணமாக இந்த மதிப்பீட்டின்படி உற்பத்தி அதிகரிக்கவில்லை.

திட்டக் கமிஷனின் சிபாரிசுகள்

திட்டக் கமிஷன் 5 வருஷத் திட்டத்தின் நகல் ஒன்றைத் தயாரித்து பொதுஜன அபிப்பிராயம் கோரியிருக்கிறது. இந்த அபிவிருத்தித் திட்டத்தின் பிரகாரம் 1951-'52 வருஷம் முதல் 1955-56 வருஷம் வரை 12 லட்சம் பேல்கள் அதிகமாக உற்பத்தி செய்ய யோசனை கூறியுள்ளது. பல்வேறு ராஜ்ய சர்க்கார்களையும் கலந்தாலோசித்தே கீழ்க்கண்ட விகிதப்படி இத திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

பேல்கள் (ஆயிரக்கணக்கில்)	
பம்பாய்	168
மத்தியப் பிரதேசம்	128
சென்னை	218
பஞ்சாப்	79
உத்திரப் பிரதேசம்	46
ஹைதராபாத்	88
மத்திய பாரத்	91
மைசூர்	75
பெப்ஸு	56
ராஜஸ்தான்	75
சௌராஸ்டிரா	159
இதர ராஜ்யங்கள்	17
மொத்தம்	1200

(குறிப்பு: ஒவ்வொரு பேலும் 392 ராத்தல் எடையுள்ளது)

திட்டக் கமிஷன் சிபாரிசுகள் 1951 ஜுலை மாதம் நடைபெற்ற இந்திய மத்திய பருத்திக் கமிட்டியின் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. அக் கமிட்டியும் இப்போது 11 லக்ஷம் பேல் அதிகப்படியாக அடுத்த 5 வருஷங்களில் உற்பத்தி அதிகரிக்க வேண்டும் என்று கூறியதை அங்கீகரித்தது. மேலும் பருத்தியும் இதர பயிர்களும் நன்றாக விளையக்கூடிய பிரதேசங்களில் அவற்றை உற்பத்தி செய்ய நன்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென்றும் அக் கமிட்டி யோசனை கூறியது.

மேலும் தற்சமயம் அயல்நாடுகளிலிருந்து ஒரு அங்குலமும் அதற்கு மேலும் உள்ள நீண்ட இழைப் பருத்தியை நாம் இறக்குமதி செய்வதினால் இதுபோன்ற விசேஷ ரகங்களை இந்தியாவிலேயே உற்பத்தி செய்ய வேண்டுமென்றும் சிபாரிசு செய்தது.

இந்த சிபாரிசுகளை மத்திய சர்க்கார் பரிசீலனை செய்துவருகிறது. இத திட்டம் சரிவர அமல நடத்தப்பட்டால் 1955-56 வருஷத்திற்கு முன்பாகவே மொத்தம் 45 லக்ஷம் பேல் பருத்தியை (அதாவது 12 லக்ஷம் பேல் அதிகமாக) இந்தியாவில் உற்பத்தி செய்ய முடியும். ஆனால் பருத்தி உற்பத்திக்கு ஏற்ற பிரதேசங்களில் இம்முயற்சி எடுத்துக் கொள்ளப்படவேண்டும்.

இறக்குமதி

இந்திய சர்க்கார் பருத்தி இறக்குமதி சம்பந்தமாக அதன் கொள்கையை 1951 ஆகஸ்டு மாதத்தில் தெரிவித்தது. அதன்படி கிழக்குஆப்ரிக்க பருத்தி நீங்கலாக இதர ஸ்டர்லிங் பிரதேசங்களிலிருந்தும் பாகிஸ்தானிலிருந்தும் பருத்தி இறக்குமதி செய்வதற்கு இறக்குமதியாளருக்கு லைசென்சுகள் வழங்கப்படும். மில்களுக்கு விற்பனை செய்ய ஒப்பந்தமில்லாமலே ஓரளவு பருத்தியை இறக்குமதி செய்யவும் அனுமதிக்கப்படும். அஷ்மௌனி சகேராஸ் பருத்திகளையும் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும். ஆனால் இப்பருத்திகளிலிருந்து உற்பத்தி செய்யும் நூலையும், ஜவுளியையும் அமெரிக்கப் பருத்தியிலிருந்து உற்பத்திசெய்யும், நூல் அல்லது ஜவுளி விலைக்கும் 10 சதவிகிதத்திற்குமேல் அதிகமாக விற்பனை செய்யக்கூடாதென்ற நிபந்தனை விதிக்கப்படும். யு. எஸ். அமெரிக்காவிலிருந்து பருத்தி வரவழைத்தல் லைசென்ஸ வழங்கப்பட்ட அளவில் 60 சதவிகிதத்தை 1952 பிப்ரவரி மாதத்திற்குள்ளாக இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்யவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படும் மீதத்தை பிரஸ்தாப வருஷமே மாதத்திற்குள் பெற்றுக் கொள்ளலாம். சூடானில் 1951—52ம் வருஷத்

(20ம் பக்கம் பார்க்க.)

திருப்பூரில்: சென்னை மாகாண முதலாவது

சென்னை மாகாண சாய, அச்சுத் தொழிற்சாலையாளர்களின் முதல் மகாநாடு திருப்பூரில் 16—12—51-ந் தேதியன்று லட்சுமி மைஸ்மில் காம்பவுண்டில் அமைக்கப்பட்டிருந்த விசேஷ பந்தலில் நடைபெற்றது. மகாநாட்டிற்கு மாகாணத்தின் எல்லா ஜில்லாக்களிலிருந்தும் 400க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

சாய. அச்சுத் தொழிலின் இம் மாகாண சரித்திரத்திலேயே இதுபோன்று ஒரு மகாநாடு நடந்தது இதுதான் முதல் தடவை. இதற்கு முன்பெல்லாம் பல ஜில்லா மகாநாடுகள் இத்தொழில் சம்பந்தமாக நடந்திருப்பினும், அம் மகாநாடுகளில் அலசிப் பார்க்காத பல விஷயங்களை இம் மகாநாடு சாங்கோபாங்கமாக விவாதித்து முடிவு செய்தது.

பிரச்னைகளின் மீது பேசிய எல்லாப் பிரதிநிதிகளும், தங்களின் உள்ளக் கிடக்கைகளை அநுபவ ஆதாரங்களோடு சர்க்காரின் நடைமுறை விளைவுகளை அப்படியே புட்டுப்புட்டு வைத்தனர்.

விற்பனை வரி;
விற்பனைக்கே தவிர கூலிக்கு அல்ல!

—சர்தார் வேதரத்னம் பிள்ளை.

விற்பனை வரித் தொல்லையில் தொழில் முதலீட்டை விற்றுக் கட்டியும் போதாத நிலையிலிருந்தோர், இன்றுள்ள நிலை மாறுதா என ஏக்கமுற்றனர்.

சாய, அச்சுத் தொழிலின் எதிர்காலம் எழில் ததும்பிநிற்க—திட்டமான வழியில் மாகாண ரீதியாக ஒன்றுபட்டு இயங்க—சர்க்காரின் துணி நூல் கொள்கையால் ஏற்பட்டுள்ள விளைவுகளுக்கு முடிவு கூற—மகாநாடு உறுதியான நடவடிக்கையெடுக்கவேண்டுமென்று பலர் துடித்தனர்.

மகாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகள் காட்டிய உற்சாகம் கரை காணாதது. காரணம்; இம் மகாநாடு அவர்களின் சொந்த தொழில்—வாழ்க்கைப் பிரச்னைகளை அடிப்படையாகக் கொண்டதல்லவா?

காலை 8—30 மணிக்கு மகாநாட்டின் தலைவர்கள் முசாபரி பங்களாவிலிருந்து ஊர்வலமாக மகாநாட்டுப் பந்தலுக்கு அழைத்து வரப்பட்டனர். சமுதாயத்திலே ஓரளவு கண்ணியமாக வாழ்க்கை நடத்தி வந்தவர்கள், பாட்ஜுகள் அணிந்து, தங்களுடைய கோரிக்கைகளை கோஷமாக்கி எழுதிக் கையிலேந்திக்கொண்டு, தகிக்கும் வெயிலில் வீதிவலம் வரக்காரணமாக இருந்த —மாகாண ரீதியான ஒற்றுமைக்கு வித்தூன்றிய — அந்த விற்பனை வரியை நான் என் மனதிற்குள்ளேயே போற்றிக் கொண்டேன்.

ஊர்வலம் மகாநாட்டுப்பந்தலை அடைந்ததும், வரவேற்புக் கமிட்டித் தலைவர் திரு. எம். கே. சின்னப்ப சவுண்டர் அவர்கள் அச்சிட்ட தனது வரவேற்பு உரையை வாசித்தார். அதில் அவர் கூறியிருந்ததாவது:—

ஆட்சி மாறியும், தொழிலின் அவல நிலை மாறவில்லை'

"........நாகரீகமான நாடுகள் அனைத்தும் உலக அணியில் தலைசிறந்து ஓங்குவதற்கு, அவைகளின் கைத்தொழில் வளர்ச்சியே அடிப்படை ஆதாரமாகும். அதில் உடையைச் சேர்ந்த நம் சாய, அச்சுத் தொழில் மிகவும் சிறந்தது; இன்றியமையாதது. இத்தொழிலில் நுட்பமான கைத்திறம் காட்டப்பட வேண்டும். இது ஒரு தனி தொழிற்கலை—இது தழைத்தோங்க அநுதாப சூழ்நிலை தேவை.

ஆனால், இப்போது அரசாங்கத்தின் மூலமாக இதற்குச் சில இடையூறுகள் நிகழ்கின்றன. "டாக்காமஸ்லின்" கதை நினைவிருக்கலாம். பன்னூறு கெஜ நூலாடையை ஓர் மோதிரத்திற்குள் பதுக்கக்கூடிய வண்ணம் மெல்லியதாய் கையால் நூற்று, நெய்ய வல்ல வண்ணம்படைத்த நெசவாளரின் விரல்களை, பொறாமை கொண்டு அன்னிய ஆட்சியாளர் வஞ்சித்துத் தரித்ததாக சரித்திரம் கூறுகிறது.

நமது சர்க்காருக்கோ வஞ்சமுமில்லை; பொறாமையும் இல்லை. செயல் என்னவோ டாக்கா மஸ்லினுக்கு ஏற்பட்ட கதிதான். தன் செய்கையின் விளைவை சிந்திக்காமல்—உணராமல் நிகழ்த்துவதாகத்தான் சர்க்காரின் செயலை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

சாய, அச்சு தொழிற்சாலையாளர் மகாநாடு.

இடையூறுகளையும், அவைகளை அகற்ற வேண்டிய அவசியத்தையும் எடுத்துக்காட்டி பன்முறை அரசாங்கத்தை நாம் நாடியிருக்கின்றோம். அவைகளினால் சிறிதளவு சில துறைகளில் பலன்களும், பரிகாரங்களும் கிட்டிற்றேயொழிய, செழிப்புக்கான சூழ்நிலை எய்தவில்லை. பல துளி பெருவெள்ளம் என்பதுபோல நாம் அனைவரும் ஒன்று கூடி, மாகாணம் முழுவதின் பேரவையாக "முயற்சி திருவினையாக்கும்" என்ற கொள்கையைப் பின்பற்றி, நம் குறைகளை நிவர்த்தித்துக் கொள்ளும நோக்கத்துடனேயே, இம் மகாநாட்டை நாம் கூட்டியிருக்கிறோம்........

விற்பனை வரி அநீதமானது.

குடிசைத் தொழில் முன்னேற்றத்திற்கு விரோதமாய் விற்பனை வரி நம்மிடமிருந்து வசூலிப்பது பெருத்த அநீதமாயிருக்கிறது. புண்படுத்தி வாங்குவதில் துன்பமே விளையும். தொழிற்

ஜீரணமான சாப்பாட்டிற்கு வரியா?

அதிகார மாற்றத்தை உணராதவர்கள் வேலை இது!

—டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார்.

றொல்லையில இந்த மொல்லையும் சேர்ந்தால், எங்கனம் சமாளிப்பது? இவ் வரி விதிப்பதற்கு சட்டம் இடம் தருவதில்லையென்பதே நிபுணர்களின் அபிப்பிராயம்.

எப்பாடு பட்டாவது நமது தொழிலுக்கு வரி விதிப்பு நீக்குவதே இம் மகாநாட்டின் முதல் நோக்கம்.

சிலருக்கு அறுசுவை உண்டி; பலருக்கு நீத்த கஞ்சியா?

நமது அரசாங்கத்தின் கீழுள்ள நாமெல்லோரும் ஒரே தாய் வயிற்றுச் சேய்கள் போலல்லவா நடத்தப்பட வேண்டும்? அப்படியிருக்க, சிறுபான்மையோருக்குமட்டும் வயிறு புடைக்க அறுசுவையுண்டியும், மற்ற பெரும்பான்மையோருக்கு நீத்த கஞ்சியும் கூட இல்லையென்றால் அடுக்குமா? இது முறையா...? என்று கேட்கத்தான் வேண்டியிருக்கிறது. "கோட்டா" என்ற சலுகையின் கீழ் மதுரை, தளவாய்புரம், மதராஸ் ஆகிய இடங்களில், அதிர்ஷ்டசாலிகளாகிய சிலருக்கு மாதம் தவறாமல் நூற்றுக்கணக்கான பேல் நூலும், ஆயிரக்கணக்கான கெஜம் துணியும நிரந்தரமாய் வழங்கப்பட்டு வருகிறது.

ஏனையோரான நமக்கோ தொழிலுக்கு நூலும், துணியும் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. கோட்டா முறையை ரத்து செய்து குடிசைத் தொழிலாகிய சாய, அச்சுத் தொழில் செய்யும் யாவருக்கும் "பிராஸஸிங் லைசென்சு" அளித்து பாரபட்சமின்றி—ஒழுங்காக—பங்கீடு முறையில் நூலும், துணியும் வழங்குப்படி ஏற்பாடு செய்யவேண்டியது மிகவும் அவசியமாகவும், அவசரமாயும் இருக்கிறது.

குருவியின் தலை மீது பனங்காய்!

குடிசைத் தொழிலாகிய சாய, அச்சுத் தொழிலுக்கு பாக்டரி சட்டம், ஷாப் சட்டம் ஆகியவைகளைப் போட்டு நம்மை ஏன் கட்டவேண்டுமென்பது விளங்கவில்லை. அதிக ஆட்கள் வைத்து வேலை வாங்கும் மில் போன்ற பெரிய தொழில் ஸ்தாபனங்களுக்குப் பொருத்த வேண்டிய சட்டதிட்டங்களை நம் மேல் ஏவி விடுவது குருவியின் தலைமீது பனங்காயை சுமத்துவது போலிருக்கிறது. இதைத் தளர்தத தீவிர ஏற்பாடுகள் செய்தாக வேண்டும்.

புதிய வெள்ளம் வந்து....!

பிச்சைக்காரன் குடியில் சனீஸ்வரன் புகுந்தாற் போல நமக்குப் போட்டியாய்த்துணி அச்சடிக்க விசை இயந்திரத்திற்கும் சர்க்கார் அநுமதியளிக்க முன் வந்துள்ளார்கள். நம் தொழிலில் இது புகுந்தால் குடிசைத் தொழில் வளர்ச்சிக்கு மரண ஒலிதான். ஆகவே, அந்த ஆபத்திலிருந்து நமது குடிசைத் தொழிலைக் காப்பது அரசாங்கத்திற்கு பெரும் பொறுப்பாகிறது.

ஒன்று படுவோம்; ஸ்தாபனம் காண்போம்!

வளர்ச்சியடையும் நம் தொழிலுக்கு பல பக்கங்களிலிருந்து எதிர் காலத்தில் இடையூறுகள் பல ஏற்படலாம். அது சமயத்தில் நாம் திரண்டு நின்று அவைகளை வீழ்த்தி நமது தொழில் முன்னேற்றத்திற்கு சீரான பாதையை அமைக்க வேண்டும். இதே நோக்கத்துடன் "மதராஸ் மாகாண சாய, அச்சுத் தொழிற் சாலையாளர் மத்திய சங்கம்"

வெளியூர்களிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகள் உள்ளூர் சாய, அச்சுத் தொழிற்சாலை சொந்தக்காரர்கள் ஆகியயோர்களைக் கொண்ட ஊர்வலம் மகாநாட்டுப் பந்தலை வந்தடைந்தபோது எடுத்த படம்.



நிறுவி, அச்சங்கத்தின் மூலம் நம் எதிர்கால பிரச்னைகள் அனைத்தையும் அணுகி நன்மையடையும் வகையில் உழைக்க உறுதி பூணுவோமாக”

வரவேற்புக்கமிட்டிக் காரியதரிசி திரு. எம். வி. ஸ்ரீனிவாசன் அவர்கள் மகாநாட்டுத் தலைவர் திரு. டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் எம். எல். ஏ, அவர்களுக்கும், திறப்பாளர் திரு. சர்தார் வேதரத்னம் பிள்ளை எம். எல். ஏ. அவர்களுக்கும் வரவேற்புப் பத்திரத்தை வாசித்தளித்து, ஏனையோருக்கு மாலைகள் அணிவித்து வரவேற்றார்.

மகாநாட்டைத் திறந்துவைத்து தஞ்சை சர்தார் வேதரத்னம் பிள்ளை அவர்கள் பேசும்போது சாய, அச்சுத் தொழிலின் மேன்மையையும், அதன் கைவண்ணம் நிறைந்த கலை அம்சத்தையும் வெகுவாய் புகழ்ந்து பேசினார்.

இத்தொழிலுக்கு விதிக்கப்பட்டுள்ள விற்பனை வரியைப் பற்றி அவர் குறிப்பிடுகையில், அதிகாரிகளில் சிலர் சர்க்கார் மீது அதிருப்தியை உண்டாக்கவும், சர்க்காரிடம் நல்ல பிள்ளைகளாக நடந்துகொண்டு உத்தியோக உயர்வு தேடவுமே கூலிக்கெல்லாம் வரிவிதித்து தொல்லை கொடுக்கிறார்களென்றும் இது ஒரு பெரிய பிரச்னையல்லவென்றும், அமைச்சர்களிடம் கூறி இதற்குப் பரிகாரம் தேடிக் கொள்ளலாமென்றும் கூறினார்.

நூல், துணி விநியோகத்தில் காட்டப்படும் கோட்டா முறையான விசேஷச் சலுகையை, இத் தொழிலில் ஈடுபட்டுள்ள எல்லோரும் சமமாகப் பகிர்ந்து அநுபவிக்க எண்ணுவது நியாயமே என்றாலும், கோட்டா முறையை நம்பியே சாய, அச்சுத் தொழில் இருக்கக் கூடாதென்றும், விநியோகத்தில் காட்டப்படும் விசேஷச் சலுகைகள் கூட தவிர்க்கப்பட வேண்டியதே எனவும் கூறி, காங்கிரஸின் ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில் வளர்ச்சிக்கு வழிவகை செய்யப்பட்டிருப்பதாகக் கூறினார்.



மகாநாட்டு திறப்பாளர் சர்தார் வேதரத்னம் பிள்ளை அவர்கள் பேசுகிறார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில்; வெளிநாடுகளிலிருந்து சாயம், கெமிகல் போன்ற பொருள்களை இறக்குமதி செய்ய நாம் வருடம் 1500 கோடி ரூபாய் வரை செலவழிக்க நேருகிறதென்றும், எனவே நம் தொழிலுக்குத் தேவையான சாயங்களை நாமே இங்கு தயாரித்துக்கொள்ள இது போன்ற தொழில் மகாநாடுகள் ஆலோசனை செய்ய முன்வரவேண்டுமென்றும், அதற்கான ஓர் ஆராய்ச்சிப் பிரிவையே தோற்றுவிக்க வழிவகை காணவேண்டும் எனக் கூறி, மகாநாடு கூட்டியவர்கள் மாகாண ரீதியாக சங்கம் அமைத்துக் கொள்ளக் கொண்டுள்ள நோக்கத்தைப் பூரணமாக ஆதரிப்பதாகவும், அந்த ஸ்தாபனம் நல்ல முறையில் நடக்க வேண்டுமென வேண்டிக்கொள்வதாகவும் கூறி முடித்தார்.

மகாநாட்டிற்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் பேசும்போது, தொழில் குவியல் முறையினால் ஏற்படும் தீமைகளைக் குறிப்பிட்டு விட்டு, சாய, அச்சுத் தொழில், கைத்தறி நெசவுத் தொழில் போன்ற குடிசைத் தொழில்களைப் பேணி வளர்க்க வேண்டுமென்றும், அதற்கு இடைஞ்சல் செய்யும் வகையில் அதிகார மாற்றத்தை உணராத அதிகாரிகள் பலர், விற்பனைக்காக ஏற்பட்ட வரியை

கூலிக்குப் பொருத்துகிறார்கள் என்றும், விற்பனைவரியின் அடிப்படைத் தத்துவம் யாருக்குப் புரியவில்லையென்றும் கூறினர்.

ஹோட்டல் போன்ற உணவு விடுதிகளுக்கு விற்பனை வரி விதிப்பது நியாயமென்றாலும், கல்வி நிலையங்களால் நடத்தப்படும் ஹாஸ்டல்களுக்கும் விற்பனை வரி விதிப்பது போன்ற செயல் வெறுக்கத் தக்கது என்றும், ஜீரணமான சாப்பாட்டிற்குக்கூட வரிவிதிக்கும் இம்முறை தடுக்கப்பட வேண்டுமென்றும் கூறிவிட்டு, மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில்,

நூல், துணி கோட்டா கிடைக்கவில்லையென குறைபடுவதைவிட, அதற்கான தொடர்ந்த முயற்சிகள் செய்ய முற்பட வேண்டுமென்றும், சாய, அச்சுத் தொழிலின் எதிர்காலம் நல்ல முறையில் இருக்குமெனவும் இத்துறையில் நீங்கள் திறமையான ஆராய்ச்சிகள் பலநடத்த லேபரட்டரிகள் அமைத்து ஒருவருக்குத் தெரிந்ததைப் பலரும் தெரியும் வண்ணம் செய்யவேண்டுமென்றும் கூறினர்.

பின்பு, திருப்பூர் நகர காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி திரு. ஏ. பி. துரைசாமி, திருப்பூர் நகர சபை உபதலைவர் திரு. கே. வி. ராமசாமி, ஜில்லா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி திரு. பி. எஸ். ரங்கசாமி, கும்பகோணம் திரு. கல்யாண சுந்தரம், சேலம் திரு. வெங்கடேசன் முதலானோர் மகாநாட்டின் மூலம் சாய, அச்சுத் தொழிலுக்கு விதிக்கப்பட்டுள்ள விற்பனைவரியை நீக்க திட்டம் வகுத்துக்கொண்டு நடைமுறை ஆக்க வேலையில் ஈடுபட வேண்டிய அவசியம் குறித்தும், தொழிலை நாணயமானதாகவும், தரமுள்ளதாகவும் நடத்தித் தொழில் செய்வோர்களுக்கிடையேயுள்ள போட்டி மனோபாவங்களை ஒழித்துக் கட்ட வேண்டுமென்றும், ஐக்கியப்படுவதின் மூலமே பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ள முடியுமென்றும் கூறினர்.



மகாநாட்டு நடவடிக்கைகளை பிரதிநிதிகள் வெகு உன்னிப்பாகவும் உற்சாகத்துடனும் கவனிக்கின்றனர்.

“கைத்தறி” ஆசிரியர் திரு. எம். கே. சாமி பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

கைத்தறி நெசவுத் தொழிலையொட்டி அதன் வளர்ச்சியிலும், வாட்டத்திலும் துணைநின்று அழிக்க முடியாத குடிசைத் தொழிலாக சாய, அச்சுத் தொழில் வளர்ந்து வருகிறதென்றும், இத்தொழிலை நடத்துவதில் உள்ள கஷ்ட நஷ்டங்களை அரசாளுவோர் புரிந்துகொள்ளவில்லையென்றும், புதிதாக ஆரம்பிக்கும் இயந்திரத் தொழில்களுக்கு—குறிப்பாக நூல் நூற்பு ஆலைகளுக்கு தொடங்கிய முதல் இரண்டாண்டுகளுக்கு வருமான வரி போன்றவைகளை விதிக்காமல், அத் தொழில்களின் வளர்ச்சிக்குப் பணத்தை அள்ளி அள்ளி கொடுக்கும் ஒரு சர்க்காரில் — சாய, அச்சுத் தொழிலுக்கு பாதுகாப்பு அளிக்காவிட்டாலும் போகிறது; இதற்குப் பாதகமானவைகளையாவது செய்யாமல் இருந்தால் போதுமென சர்க்காரைக் கோரவே மகாநாட்டைக் கூட்டியவர்களின் நோக்கமாக இருக்கமுடியுமென்று கூறினர்.

மகாநாட்டுத் தலைவர்
ஸ்ரீ அவினாசிலிங்கம் செட்டியார்
அவர்கள் பேசுகிறார்.

தொடர்ந்து பேசுகையில், நூல், துணி போன்றவைகளில் சிலருக்குக் காட்டப்படுகிற சலுகையை ஒழிக்க வேண்டுமென அட்வைசரி சர்க்கார் ஆட்சியிருந்த காலந்தொட்டு கூக்குரலிட்டும் இன்றுவரை அது தொலைக்கப்படாமல் நீடித்தே நடத்தப்படுகிறதென்றும், கலர் நூலுக்கென கோட்டா பெறுவோர் எப்படி மக்களையும், நெச

வாளர்களையும் மட்ட சாயம் போட்டு கொள்ளை நடத்துகிறார்களென்றும், வெள்ளையன் ஆட்சியில்தான் இந்தப் பாரபட்சமெனில், காங்கிரஸ் சர்க்காரிலுமா அது இருக்கவேண்டுமென கேட்பதாகவும், அரசியல் சட்டத்தின் அடிப்படை அம்சங்களையே அதை நிறைவேற்றியவர்கள் மீறுகிறார்களென்றும், இதை எத்தனையோ தடவைகளில் எடுத்துக் காட்டியும் திருத்திக் கொள்ளப் படவில்லையென்றும், இந்த அக்ரமங்களை எதிர்த்து தொடரப்பட்ட வழக்குகளில் உயர்நீதி மன்றங்கள் கொடுக்கும் தீர்ப்புகளை சர்க்கார் அமுலுக்குக் கொண்டுவரவில்லையெனப் புகார்கள் கூறப்படுகிறதென்றும் கூறிவிட்டு, விற்பனை வரியைப்பற்றிக் கூறியதாவது:—

விற்பனைவரியை சாய, அச்சுத் தொழில்களுக்குப் போட்டு அவர்களுக்கு தொல்லை கொடுப்பது எவ்விதத்திலும் நியாயம் இல்லையென்றும், கூலி வேலைக்கு வரிகிடையாது என அச்சுக்கூடங் (Press) களுக்கு விலக்களித்துவிடும் சர்க்காரில், துணியையோ, நூலையோ கொண்டு சாய, அச்சு வேலைகளைக் கூலிக்குச் செய்வோருக்கு மட்டும் வரி விதிக்க முன்வருவது எப்படிப் பொருந்தும் எனக் கேட்பதாகவும், ஒரு சட்டம் இரண்டு விதமாகப் பேசுகிற பழக்கத்தை நாம் இங்குதான் பார்க்கமுடிகிறதென்றும், எனவே சாய, அச்சுத் தொழில்களின் கூலி வேலைக்காகட்டும், அல்லது இதர வேலைகளுக்காகட்டும் விற்பனை வரியென்பதே இருக்கக் கூடாதென்றும், காரணம்; இது ஒரு வளர்ச்சியடையாத — மேற்கொண்டும் சர்க்காரால் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வளர்க்கப்படவேண்டிய குடிசைத் தொழிலாகுமென்றும் குறிப்பிட்டார்.

திருப்பூர் ந. கா. க. காரியதரிசி ஸ்ரீ ஏ. பி. துரைசாமி அவர்கள் பேசுகிறார்.

கோட்டா போன்ற விசேஷ சலுகையை ஒழித்து, எல்லோருக்கும் சமமாக சாய, அச்சுத் தொழிற்சாலைகளுக்கு துணி, நூல் அலாட்மெண்ட் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும், விற்பனை வரி நீக்கப்பட வேண்டும் என்றும் இல்லையெனில் மாகாண ரீதியாக ஸ்தாபனம் அமைத்து அதன்மூலம் சர்க்கார் மீது வழக்குத் தொடரவேண்டியேற்படும் என்றும் எச்சரித்து, மகாநாட்டிற்கு வந்திருக்கும் தலைவர்கள் மேற்கண்ட இக் குறைந்த பட்ச கோரிக்கையையாவது நிச்சயமாக நிறைவேற்றுவோம் என மகாநாட்டுப் பிரதிநிதிகள் முன் வாக்குறுதி யளித்தாக வேண்டுமென்றும் சொன்னார்.

இத்துடன் மகாநாட்டு காலை நிகழ்ச்சிகள் முடிந்தன.

பிற்பகல் மகாநாட்டு நிகழ்ச்சிக்கு "கைத்தறி" ஆசிரியர் எம். கே. சாமி தலைமை வகித்தார். முதலில் மகாநாடு வெற்றிகரமாக நடைபெற வாழ்த்தி கைத்தொழில் அமைச்சர் சி. பெருமாள்சாமி ரெட்டியார், என். எம். ஆர். சுப்பராமன் எம். எல். ஏ., மற்றும் பலரிடமிருந்து வந்திருந்த வாழ்த்துச் செய்திகளை வரவேற்புக் கமிட்டிக் காரியதரிசி ஸ்ரீ எம். வி. ஸ்ரீனிவாசன் வாசித்தார்.

பின்பு கீழ்க்கண்ட தீர்மானங்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பல வெளியூர் பிரதிநிதிகளின் திருத்தங்கள்; ஆலோசனைகளோடு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்களின்மீது சேலம் வெங்கடேசன், கும்பகோணம் பி. கல்யாண சுந்தரம். தஸ்மா ராமசாமி ஐயர், சென்னை வி. என். குமாரசுவாமி, ஈரோடு சி. அம்பாயிரம், சென்னை ஏ. வி. ஜெயச்சந்திரன், ஆற்காடு கண்ணப்ப முதலியார், திருப்பூர் கருப்புசாமி மற்றும் பலரும் பேசினர்.

தீர்மானங்களாவன.

(1) கூலிக்குப் பெறப்பட்ட நூலுக்கும் துணிக்கும் சாயம் போட்டு கொடுப்பதற்கும், அச்சடித்துக் கொடுப்பதற்கும் வாங்கும் கூலியின் பேரில் சர்க்காரால் விதிக்கப்படும் விற்பனை வரியானது குடிசைத் தொழிலாகியசாயம் போடும்தொழிலையும் அச்சடிக்கும் தொழிலையும் நசுக்குவதாயிருப்பதால் மேற்படி வரியை நீக்கிவிட வேண்டுமாய் இம்மகாநாடு சென்னை சர்க்காரைவற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

(2) மாகாணத்திலுள்ள எல்லா பிராஸஸ் செய்கிறவர்களுக்கும் லைசென்ஸ் வழங்கி, மில் ஜவுளியை சமபங்காக வினியோகிக்க வேண்டுவதோடு அச்சுத் தொழிலுக்கு லாயக்கான துணி

களை ஜில்லா வாரியாக தேவையை அனுசரித்து வினியோகம் செய்ய கோருவதுடன் எல்லாருக்கும் டெக்ஸ்மார்க்கும் கொடுக்க சர்க்காரை மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

(3) குடிசைத் தொழிலுக்குப் பாதகமானதாக மெஷின் பிரிண்ட் தொழில் இருப்பதால், அதற்கு மேற்கொண்டும் அநுமதியளிக்கக் கூடாதென சர்க்காரை இம்மகாநாடு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

(4) 1942-ம் ஆண்டில் மில்லிலிருந்து நூல் வாங்கி சாயச் சாலை நடத்தி வந்தார்கள் என்பதற்காக மாகாணத்தில் சில சாயச் சாலைகளுக்கு **டையர்ஸ் கோட்டா** என்ற பெயரால் மில் வாசல் விலைக்கு நூல் அலாட்மெண்ட் செய்யப்படுவதைப் போல், பாகுபாடின்றி மாகாணத்திலுள்ள எல்லா சாயச் சாலைகளுக்கும் லைசென்ஸ் வழங்கி அலாட்மெண்ட் போடவேண்டுமென்று இம்மகாநாடு சர்க்காரைக் கோருகிறது. அப்படி மாகாணத்தில் உள்ள சாயச் சாலைகள் அனைத்திற்கும் நூல் அலாட்மெண்ட் போட சாத்தியமில்லையெனில், அமுலில் உள்ள டையர்ஸ் நூல் கோட்டா முறையை ரத்து செய்துவிட வேண்டுமாயும் சர்க்காரை மகாநாடு வற்புறுத்துகிறது.

(5) புராதன கைத்தொழிலாகிய கைத்தறி நெசவுத் தொழிலுக்கு துணைத் தொழிலாகிய "சாய அச்சுத் தொழிலை"யும் குடிசைத் தொழிலாக அங்கீகரித்து மேற்படி தொழிலை அபிவிருத்தி செய்ய உதவுமாறு சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

(6) நமது சாய அச்சுத் தொழிலை தேசத்தின் குடிசைத் தொழில் அபிவிருத்திக்காக தயாரிக்கப்பட்டிருக்கும் 5 வருட திட்டத்தில் சேர்த்து உதவியளிக்குமாறு இம்மாநாடு சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

"கைத்தறி" ஆசிரியர் எம். கே. சாமி பேசுகிறார்.

(7) சாய அச்சுப் பட்டறைத் தொழிலின் நன்மைக்காகவும் அபிவிருத்திக்காகவும் சர்க்கார் ஒரு Dyes and Chemical லாபரட்டரி (For Techenical assistance) ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறது.

(8) சாய, அச்சுத் தொழிற் சாலைகளை இண்டஸ்ட்ரியல் ஏரியாவில் கொண்டு போய்த்தான் வைக்கவேண்டுமென நிர்ப்பந்தம் செய்வது காரியசாத்தியமற்றது. மக்கள் மத்தியில் காபி ஓட்டல்கள் இருப்பது எவ்வளவு அவசியமோ அதேபோல் சாய, அச்சுத் தொழில்கள் நெசவாளர்கள் வாழும் வட்டாரங்களிலேயே தான் இருக்கவேண்டும் என்பதை சர்க்கார் கவனத்திற்கு இம் மகாநாடு கொண்டு வருகிறது.

(9) மதுரை, சுன்னடி ரகத்திற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதுபோல், அச்சடித்து சாயம் போடப்பட்ட மில் துணியை விலை முத்திரை இடாமல், மில் ஜவுளி விற்பனை லைசென்ஸ் இல்லாமல் சேல்ஸ் டேக்ஸ் கட்டக்கூடிய ஜவுளி வியாபாரிகளுக்கு விற்க அனுமதிக்கும்படி மகாநாடு சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

(10) தறிகாரர்களின் சௌகரியத்தை முன்னிட்டு உடனுக்குடன் தங்களுக்குத் தேவையான சாய நூலை வாங்கிக்கொள்வதற்காக ஜில்லா கலெக்டரால் அனுமதிக்கப்பட்டிருக்கும் நூலுக்கு Buffer Stock நூல் விற்பனை எனக் கருதி விதிக்கப்படும் விற்பனை வரியை ரத்து செய்யும்படி சர்க்காரை கேட்டுக்கொள்கிறது.

(11) சென்னை கட்டுப்பாடு பொருள்கள் டைரக்டர் திரு. பி. எஸ். விஸ்வநாத ஐயரின் அகால மரணத்திற்கு மகாநாடு தனது ஆழ்ந்த வருத்தத்தை அன்னாரின் குடும்பத்திற்கும், சர்க்காருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறது.

மகாநாடு மேலும் பல தீர்மானங்களை நிறைவேற்றியதோடு மாகாண சங்கத்திற்கான பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுத்தது. இரவு 10-30 மணிக்கு வரவேற்புக் கமிட்டித் தலைவர் நன்றிகூற மகாநாட்டு நிகழ்ச்சிகள் யாவும் வெற்றிகரமாக முடிந்தது. ○

சந்தா விகிதம்

ஆண்டு சந்தா ரூ. 3.
தனிப் பிரதி அணா நான்கு.

மாதிரிப் பிரதி வேண்டுவோர் நான்கு அணாவுக்கு தபால் ஸ்டாம்பு அனுப்பவும்.

ஏஜண்டு இல்லாத ஊர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

"கைத்தறி" காரியாலயம்,
முத்தண்ணன் குளம் வீதி,
கோவை.



(1) சர்தார் வேதரத்னம் பிள்ளை, (2) டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார்,
(3) 'கைத்தறி' ஆசிரியர் எம். கே. சாமி (4) கோ. ஜி. கா. க. காரியதரிசி: பி. எஸ். ரங்கசாமி,
(5) மகாநாட்டு வரவேற்புக் கமிட்டித் தலைவர் (நிற்பவர்) எம். கே. சின்னப்ப கவுண்டர்.

(22ம் பக்கத் தொடர்ச்சி)

தாக இருந்தது. இன்று அதே வியாபாரிகள் வியாகூலத்தில் விழுந்து விட்டனர். இது வியப்பல்ல. இயல்பு! உழைத்த உழைப்பு வீணாகப் போவதில் வருத்தம் இருக்கத்தான் செய்யும். விலை ஏற்ற மார்க்கெட்டில் லாபம் ஒன்றுக்கு இரண்டாக வருகிறது. ஆனால் விலை இறக்கத் தருவாயில வந்த லாபம், இருந்த லாபம் எல்லாம் போய் ஏமாற்றத்தை உண்டாக்குகிறது. இதனால் இதையே ஜீவனாம்ச தொழிலாகக் கொண்ட முதலாளிகள், தொழிலாளிகள், தறிக்காரர்கள் சிதைவு படுகின்றனர். இதில் கண்ட்ரோல் என்ற சக்தி முனைகள்! மேலும் வியாபாரிகளை விழுங்கும் விற்பனை வரி, வருமான வரி என்ற முதலைகள்!!

இவ்வளவிலும் தனித்துக் கைவிடப்படுபவர்கள் தொழிலாளியும் தறிக்காரனும்தான். இரவு பகலாக இவர்களை கைதியைப்போல் கண்ணுறங்காமல் உழைக்கச் செய்து, அவர்கள் உழைப்பினால் வருகிற லாபத்தின் மீது தங்கள் போகப் படுக்கையை விரித்துக் கொள்ளுகிறார்கள் முதலாளிகள்! எந்தஆட்சி அமைந்தாலும் சரி தொழிலாளர்களையும், கைத்தறிக்காரர்களையும் திரும்பிப் பார்க்கிற கண்காணிப்பு வேண்டும். எந்தத் திட்டமானாலும், அதிலிவர்கள் பிரச்னையும் சேர்க்கப்படுவதோடு 'உங்கள் குறைகள் என்ன' என்று விசாரித்தவையா யிருக்கவேண்டும். அம்மாதிரி இல்லாவிடில் நாட்டின் எத்தொழிலானாலும் அவற்றை விழுங்குவதற்கு 'சவக் குழி' தனது வாயைப் பிளந்துகொண்டு தான் இருக்கும்.

O

எங்கும் தேக்கம்!

ராஜ்யமெங்கிலும் இருந்து வருகிற செய்திகள் அனைத்தும் கைத்தறி ஜவுளிகள் விற்க முடியாது மிகப் பெரிய அளவில் தேக்கமேற்பட்டு விட்டதாக அறிவிக்கின்றன. கைநெசவாளர் கூட்டுறவு சொஸைட்டிகளிலும் சரி, தனிப்பட்ட உற்பத்தியாளர்களிடமும் சரி கைத்தறி ஜவுளிகள் தேங்க ஆரம்பித்திருப்பதோடு, விலைகளும் ஒன்றுக்குப் பாதியாகக் குறைந்தும் போய் விட்டிருக்கின்றன. அதே காலத்தில் நூல் விலை மட்டும் குறையவில்லை!

கைத்தறி ஜவுளி தேக்கத்திற்கான காரணத்தை—எதிர்நோக்கி நிற்கும் அபாயத்தை நாம் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னதாகவே நமது நேயர்களுக்கு எச்சரிக்கை செய்திருந்தோம். அதைப்பற்றி நாம் மீண்டும் இங்கு விளக்கவேண்டிய அவசியம் இப்போது நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

நம் மாகாணத்தில் உற்பத்தியாகும் கைத்தறி ஜவுளிகள் முழுவதும் நம் மாகாணத்திலோ, அல்லது உள்நாட்டிலோ பூரணமாக விற்றுவிடுவதில்லை. ஒரு குறிப்பிட்ட அளவு — அதுவும் சில குறிப்பிட்ட ரகங்கள்தான் விற்பனை ஆகின்றன. பாக்கி பெரும்பகுதி ஜவுளி வெளிநாடுகளிலேயேதான் அதிகப் விற்பனை ஆகிக்கொண்டு வருகின்றன.

உதாரணமாக லுங்கி, சாரம், கைக்குட்டை போன்ற ரகங்களில் 90 சதத்திற்கு அதிகமாக பாகிஸ்தான், மலேயா, பர்மா, சிலோன், தென் அமெரிக்கா போன்ற நாடுகளிலேயேதான் நாம் இதுவரை விற்றுவந்தோம்.

தவிர 20, 26 நெ. நூலில் தயாரிக்கப்படுகிற 7, 8 கெஜம் புடவை ரகங்கள் பெரும்பாலாக சிலோன், மலேயா போன்ற நாடுகளில் குடியேறி அங்குள்ள தேயிலை, காபி, ரப்பர் தோட்டங்களில் வேலை செய்துவரும் நம் நாட்டு தாய்மார்கள் மத்தியிலேயே விற்றுவந்தன.

இன்று அந்த இடங்களில் கைத்தறித்துணி விற்பனை குறைந்துபோயுள்ளது. அதன் காரணமாக இங்கு தேக்கமும், விலைக் குறைவும் ஏற்பட்டு, ஏற்கனவே வாழ்க்கை நடத்த வகையற்று நிற்கும்நெசவாளியின் கூலியிலே வெட்டு ஏற்படுத்தியிருக்கிறது.

எம். கே. சாமி.

கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள், தனிப்பட்ட உற்பத்தியாளர்கள் அனைவருமே இன்று ஜவுளி தேக்கத்தின் காரணமாக நெசவாளியின் கூலியைக் குறைத்து விட்டார்கள். இச் செயலுக்கு நாகரீகமான பாஷையில் "உற்பத்திச் செலவைக் குறைப்பதாக"ச் சொல்லுகிறார்கள். கைத்தறி நெசவாளர்களோ இதைக் "கூலி வெட்டு" எனப் பச்சையாகச் சொல்லுகிறார்கள்.

ஏதோ சமதர்மத் தத்துவம் கூட்டுறவு இயக்கத்தில் நிலவி நிற்பதாகப் பறையறைவோர்கூட, முதலாளித்வ முறையான கூலி வெட்டைத்தான்—மார்க்கெட்டின் இறக்கத்தையொட்டி அமல் நடத்துகின்றனர். இந்தக் கூலி குறைப்புச் செயல் ஒன்றே போதும், நெசவாளர் கூட்டுறவு இபக்கத்தில் சமதர்மதத்துவம் அறவே இல்லையென்பதற்கு. தத்துவ விசாரணையைப் பிரிதொரு சமயம் ஆராய்வோம். இப்பொழுது ஏற்பட்டுள்ள ஜவுளித் தேக்கத்திற்கான காரணத்தை மட்டும் நாம் இங்கு ஆராய்ந்து, அதைப் போக்க வேறு என்ன நடை முறைகளைக் கையாளலாம் என்பதைக் கொஞ்சம் துருவிப் பார்க்கலாம்.

தூரகிழக்கு நாடுகளிலும், மேற்கத்திய நாடுகளிலும், பாகிஸ்தானிலும் கைத்தறி ஜவுளி தனது மார்க்கெட்டை இழக்கக் காரணம் என்ன என்ற கேள்வியை எழுப்பிக்கொண்டு அதற்கு சுருக்கமான பதில் காணவேண்டுமெனில், இந்திய சர்க்காரின் வெளிநாட்டு வர்த்தகக்கொள்கைதான் காரணம் என்று சொல்லி விடலாம்.

கோடிக் கணக்கான கெஜம் கைத்தறி ஜவுளி தேங்கி நிற்கிற இந்த சந்தர்ப்பத்தில், அவைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய சிறிதும் முயற்சிக்காமல் 1952 ஜனவரி முதல் ஜூன் மாதம் வரை, அதாவது 6 மாதங்களில் மில் ஜவுளியை 5 கோடியே 75 லட்சம் கெஜத்தை நேற்றுவரை கைத்தறி ஜவுளி மார்க்கெட்டாக இருந்து வந்த பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஏடன், மலேயா, ஹாங்காங் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய சர்க்கார் லைசென்சுகள் வழங்க

"கைத்தறி" வாழ்க!

(இரா. அவையழகன்.)

வண்டொலியைக் கொண்டுவரும் தென்றல் போல
வளமிகு இலக்கியங்க ளினிமை போல
வண்டமிழர் பொன்னாளாம் பொங்கல் நாளில்
வாடாத மலர்போன்று மலர்ந்தது "கைத்தறி" தான்.

கடும்புயல் கடல்தனிலே வீசிட்டாலும்
கலங்காது கலமோட்டும் மாலுமி போல்
உடைநெய்யும் நெசவாளர்க் கின்னல் வந்தால்
உறுதியுடன் போராடி வெற்றி காணும்

தாயைக்கண் டுளமகிழும் சேயைப் போல
"தறி" கண்டு மகிழ்கின்றா ராடை நெய்வோர்
ஓய்வின்றி உழைக்கும்நல் லுழைப்பா ளன்போல்
உழைத்து வரும் "கைத்தறி" யை வாழ்த்துகின்றார்

முடிவு செய்திருப்பதாக ஏற்றுமதி கூட்டு பிரதம கண்ட்ரோலரின் பத்திரிகைக் குறிப்பிலிருந்து நாம் அறிகிறோம்.

இதில் இந்நாட்டுப் பாமர மக்களின் அன்றாடத் தேவைக்கு ஏற்ற மோட்டா ரகம் 3 கோடியே 14 லட்சம் கெஜம் இடம் பெற்றுள்ளது என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

உள்நாட்டில் மெல்லிய, மிக மெல்லிய ரக நூலுக்கும், துணிக்கும் விலையைக்கூட்டிவிட்டு, ஏற்கனவேயே கூடுதலான விலையை நிர்ணயித்ததின் காரணமாக மார்க்கெட்டில் நடுத்தர மில் ஜவுளியை எக்கச் சக்கமாகத் தேக்கி நிறுத்தி — கொஞ்சநஞ்சம் கூட உள்நாட்டில் கைத்தறி ஜவுளி விற்காமல் செய்துவிட்டு — வெளிநாடுகள் ஏற்றுமதி விஷயத்தில் கைத்தறி ஜவுளியைப் பற்றி எள்ளத்துணையும் சிரத்தை காட்டாது—அந்த ஜவுளிகள் ஏற்கனவேயே கிராக்கியாக விற்றுவந்த இடத்தில் எல்லாம் இந்திய மில் ஜவுளிக்கு மார்க்கெட் தேடிக் கொடுத்து வரும் – வட நாட்டுப் பஞ்சாலை மன்னர்களுக்கு ஆதரவான கொள்கைதான் நம் ராஜ்ய கைத்தறி ஜவுளித் தேக்கத்திற்குக் காரணம் என்று சொன்னால் யாரும் தவறு எனச் சொல்ல மாட்டார்கள் என்றே நாம் கருதுகிறோம்.

சர்க்காருக்கு வாஸ்தவத்திலேயே கைத்தறி ஜவுளிக்கு நிரந்தரமான மார்க்கெட் தேடித் தரும் ஆசை ஒன்று இருந்திருக்குமானால்—குறிப்பாக அப்படிச் செய்வது தனது கடமையாகக் கருதியிருக்குமானால், வெளிநாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தங்கள் செய்துகொள்ளும் காலங்களில் மில் ஜவுளியை அனுப்புகிற அளவில் பாதியையாவது உடன் சேர்த்து அனுப்ப வழி செய்திருக்க வேண்டும்.

இன்றுவரை அப்படிச் செய்ததாகத் தெரியவில்லை. அதற்குப் பதில் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் வெளிநாடுகளுக்குச் சென்று மார்க்கெட் தேட வேண்டுமென முயற்சித்தபோது அதற்குத் தடையாக சர்க்கார் இருந்திருக்கிறது.

குறிப்பாக, சென்னை ராஜ்ய கைத்தறி கமிட்டியானது சர்க்காரால் அமைக்கப்பட்டது. அதில் அங்கம் வகிக்கும் பலரும் சேர்ந்து கைத்தறி ஜவுளிக்கு நிரந்தரமான மார்க்கெட் தேட வேண்டுமென்றும், அதற்கான ஒரு தூது கோஷ்டியினரை ஆசிய நாடுகளில் சுற்றிவர சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டனர்.

சர்க்கார் இந்தக் கோரிக்கையை, தூது கோஷ்டியில் செல்வோர்கள் போகவர ஏற்படும் செலவை ஏற்றுக்கொள்வதானால் தாராளமாகத் தூது சென்று வரலாமெனச்சொல்லி, அந்த உணர்வு தோன்றியவர்களை மக்கடித்து விட்டார்கள்.

உருப்படியான வேலைக்கு — யோசனைக்கு செலவு செய்ய மறுக்கிற அதேகாலத்தில், பல கோடிக்கணக்கான ரூபாய்களை—ஏழை எளிய மக்களின் பணத்தை மட்டும் சர்க்கார் வீண் விரயமாக்கி வருவது கைத்தறியாளர்களுக்குத் தெரியாதென எண்ணித் தான்மேற்கண்ட முறையில்பதில் சொல்லப்படுகிறது போலும்.

இன்று ஏற்பட்டுள்ள கைத்தறித் துணித்தேக்கத்தை தீர்க்க உடனடியாக அதற்கு ஓர் நிரந்தரமான மார்க்கெட்கண்டுபிடிக்கும் வரையில் தூதுகோஷ்டி யொன்றை வெளிநாடுகளுக்கு அனுப்ப சர்க்கார் முன்வரவேண்டும். அத்துடன் நில்லாது நெசவாளியின் கூலியைக் குறைக்கும் ஏற்பாட்டிற்கும் சர்க்கார் முற்றுப் புள்ளி வைக்க முன் வந்தாகவேண்டும்.

அதற்கு அடிப்படையாக நூலின் நிர்ணய விலையைக்குறைத்து நெசவாளர்களின் கூலி குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டுவதே.

நாம் நூல் விலையைக் குறைக்கச் சொல்லுகிற போது, இது சாத்யமான ஆலோசனையாக இல்லையே என நினைக்கும் கூட்டத்தாருக்கும், பருத்தியின் விலையுயர்வைக் காட்டி நூலுக்கு விலையைக் குறைக்க முடியாதென சொல்வோருக்கும் நாம் கூற விரும்புவது ஒன்றேஒன்றுதான்.

மில் ஜவுளிக்கு "செஸ்வரி" விதித்து அதன்மூலம் வரும் தொகையை நூலுக்குக் குறைக்கப்படும் விலை நஷ்டததிற்கு ஈடு செய்துகொள்ள வேண்டும் என்பதுதான் அவ்வாலோசனை. இதை எவரும் காரியசாத்யமானதல்லவெனச் சொல்ல முடியாது. மனமும், கடமையுணர்ச்சியும் வேண்டும் அவ்வளவுதான்.

(1) வெளிநாடுகளில் கைத்தறி ஜவுளிக்கு நிரந்தரமான மார்க்கெட் தேடுவது (2) மில் நூலுக்கு நெசவாளியின் கூலி குறையாத அளவுக்கு விலையைக் குறைக்கச் செய்வது ஆகிய இந்த இரண்டு ஆலோசனைகளையும் அமல் நடத்த சர்க்கார் தன்னை சரிப்படுததிக் கொண்டு முன்வராத வரை, கைத்தறி ஜவுளிக்கு எப்போதும் இந்தத் தலைவலி இருந்தேதான் தீரும் என்பதை எடுததுககாட்டுகிறோம்.

நம் நாட்டு கைத்தறி ஜவுளியின் தேக்கத்திற்கும், அமெரிக்க அரசியல் தில்லுமுல்லுக்கும் உள்ள சம்பந்தம் எப்படி ஜப்பான் தேச பஞ்சாலைத் தொழில்மூலம் அமல் நடத்தப்படுகிறது என்பதையும், அதற்கு எவ்வாறு நம் சர்க்கார் இடம் கொடுத்துள்ளது என்பதையும் இதே தலைப்பில் அடுத்த கட்டுரையில் ஆராயலாம்.

○

காமதேனு

டெக்ஸ்டைல்ஸ்

ஈஸ்வரன் கோவில் தெரு, ஈரோடு.

★

அழகான ஷர்ட்டிங், அற்புதமான சீட்டி, சேலை தினுசுகள், காடா பீசுகள், வேஷ்டித்தான்கள், துண்டுமடிகள்

★

மில்துணியைப் போன்று சலவை செய்தும், கேலண்டர் செய்தும், மெஷின் பிரிண்ட் செய்தும், கெஜமடிப்புச் செய்தும் சப்ளை செய்கிறோம்.

எல்லோருக்கும் எமது

பொங்கல் வாழ்த்துக்கள்!

போலித் தறி ஒழிப்பு!

போலித் தறிகளை ஒழித்துவிடவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அந்நடவடிக்கையில் ஈடுபடும்படி சர்க்கார் கேட்டுக்கொண்டு ஒரு உத்திரவு போட்டிருக்கிறார்களெனத் தெரியவருகிறது.

இந்த உத்திரவின் அடிப்படை நோக்கத்தை நாம் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். ஏனெனில், போலிகள் பலர் நெசவுத் தொழிலில் புகுந்துகொண்டு செயலாற்றியுள்ள தீங்குகள் அளவிடமுடியாதவையென்பதால் மட்டுமல்ல; உண்மையான கைத்தறி நெசவாளிக்கு இப்போலிகளால் ஏற்பட்ட அபகீர்த்தியையும் மனதில் கொண்டேதான் நாமும் "போலித்தறிகள் ஒழிக" என கோஷித்தோம்; எழுதினோம்.

நாகரீகம் உள்ள எந்த சர்க்காரும், எவ்விஷயத்திலும் போலிகள் இருப்பதை விரும்பமாட்டார்கள்தான். அதேபோல நேர்மை எண்ணம் கொண்ட மக்களும் போலிகளை விரும்பமாட்டார்கள். போலித்தறிகள் ஏற்படக்காரணமான சர்க்காரின் டெக்ஸ்டைல் கொள்கையை எந்த வேகத்தோடு நாம் கண்டிக்கிறோமோ, அதேபோல நம் மத்தியில் உள்ள தவறுகளையும் கண்டிக்கிறோம் நாம். காரணம்; பரஸ்பரம் திருந்திக்கொண்டு சரியான வழியில் செல்ல உதவிபுரியவேண்டுமென்னும் நல்ல நோக்கத்திற்காகவேயன்றி, எதிலும் குறைகாண வேண்டும் என்பதற்காக அல்ல.

புதிய முறையொன்று செயலில் வரும்போது, அதனால் வரும் தீங்குகளை நாம் அனுபவ பூர்வமாக எடுத்துக்காட்டி—விமர்சித்து—திருத்திக் கொள்ள வேண்டுமென்று கோருவதே நாட்டின் நலன் பேணும் நல்லதொரு பிரஜை செய்யும் வேலையென்ற எண்ணத்தினால்தான் இதைக் கூறுகிறோம்.

தவறு ஏற்படுவதை தைரியமாக எடுத்துக்காட்டிக் கண்டிக்க வேண்டுவது தமிழ் மகன் ஒவ்வொருவனுடைய கடமையாகும் என்பதையும் நாம் இங்கு எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறோம்.

அதனாலேயேதான் நாம் போலித்தறிகள் வளரத் தலைப்பட்ட அன்றே அதை வன்மையாகக் கண்டித்தோம்.

அதன் பரிணாமத்தைப் பாருங்கள். கைத்தறி நெசவாளர்கள் தங்களின் தொழிலுக்குத் தேவையான நூல் கேட்டு மகத்தானதொரு போராட்டத்தில் இறங்கத்தயாராக இருந்த காலத்தில், அவர்களின் போருணர்ச்சியை மழுங்கச் செய்ய சர்க்கார் ஒரு உபாயத்தைக் கையாளத் தயாராயினர்.

அதுதான் உண்மையான தறிகளைக் கணக்கெடுத்து நூல் வழங்கப் போகிறோமென்றதும் அதற்காக ஊர் தோறும் நூல் ஆலோசனைக் கமிட்டிகளை சர்க்கார் அமைத்ததும்.

இந்த ஏற்பாட்டை ஆரம்பத்திலேயே எச்சரித்துக் கண்டித்தோம். ஸ்ரீ பிரகாசம் காலத்து கிராம குரூப் கமிட்டிகளின் அனுபவங்களை ஆதாரத்தோடு எடுத்துக்காட்டினோம். கிணறு வெட்டுகிறீர்கள்; நிச்சயம் பூதம் புறப்பட்டு வரும் என இடித்துக் கூறினோம். உண்மைத் தறிகள் என்ற பெயரில் பல ஆயிரம் போலித் தறிகள் பெருகப்போகிறது என பேரிடி முழக்கினோம்.

அன்று சர்க்கார் கேளாக்காதினராக ஆயினர். இன்று நம் எச்சரிக்கை பூரணமாக உண்மையாகப் போய்விட்டது. முள்ளின்மீது சேலையைப் போட்டுவிட்டு இப்போது மெள்ள மெள்ளக் கிழிந்து போகாமல் எடுக்கிறார்கள் போலித் தறிகளை ஒழிக்கிறோமென்ற பெயரால். முன்னதாகவே நாம் சொன்ன யோசனையைக் கேட்டிருந்தால் இன்று ஏன் இந்தத் தொல்லையை மேற்கொள்ளவேண்டியேற்படுகிறது.

சரி; போலித் தறிகள்தான் ஒழிக்க முனைந்தனரே, அதையாவது ஒழுங்காகச் செய்தனரா என்றால் அதுவும் இல்லை. அவலை நினைத்துகொண்டு உரலை இடித்த கதை போல, போலித் தறிகளை ஒழிக்கச் சென்ற புண்ணிய மூர்த்திகள் உண்மைத் தறிகளையே ஒழித்துவிட்டார்கள்.

இந்த காட்டுமிராண்டித் தனமான செயல்களை நாம் பல்வேறு சமயங்களிலும் வன்மையாகக் கண்டித்தே வந்திருக்கிறோம்.

ஏழை, எளிய மக்களின் வயிற்றிலே மண்ணையடித்துப் போலிகளின் பாதுகாவலர்களாகப் பல அதிகாரிகள் நின்ற காட்சி நாடறிந்த ரகசியமாகப்

போய்விட்டது. இந்த ஜன விரோத செயலைக் கண்டிக்க முற்பட்டவர்களை—அதை மேலதிகாரிகளுக்கு எடுத்துச் சொல்ல முன்வருபவர்களை குட்டி அதிகார தேவதைகள் கொடுமைப்படுத்துகின்றனர். சர்க்கார் போடும் உத்திரவுகளையே துச்சமாக மதித்து காலடியில் போட்டு தேய்க்கின்றனர்.

ஒழித்தது போலித்தறிகளை அல்ல; உண்மைத் தறிகளாக்கும் என சர்க்காருக்கு ஆதாரபூர்வமாக எடுத்துக் காட்டிய பின், சர்க்காரும் நியாயத்தை உணர்ந்து ஒழிக்கப்பட்ட தறிகளின் நூல் கூப்பன்களைத் திருப்பிக் கொடுத்துவிடும்படி உத்திரவிட்டால், அந்த உத்தரவை அமுல் படுத்துவதில் ஆளுக்கு ஆள் வித்தியாசம் காட்டப்படுகிறது டெக்ஸ்டைல் கண்ட்ரோல் அதிகாரிகளால் எனப் புகார்கள் வருகின்றன.

நீ "கைத்தறி" ஆசிரியருக்கு உன் தறியை ஒழித்தது சம்பந்தமாகக் கடிதம் எழுதினையல்லவா, ஆகவே உன் தறிக்கு கூப்பன் தாமுடியாது; "கைத்தறி" ஆசிரியரிடம் போய் வாங்கிக் கொள் என ஏழை நெசவாளிக்கு உபதேசம் செய்யப்படுகிறதாம் டெக்ஸ்டைல் அதிகாரிகளால்.

வேடிக்கையாக இல்லையா இது. பொறுப்புள்ள அதிகாரிகளால் சொல்லப்படும் பதிலாகவா இது படுகிறது. அதற்குப் பதில் நெசவாளர் சமூகத்தையே வஞ்சம் தீர்த்துக்கொள்ள முற்பட்டுள்ள கல் நெஞ்சர்களின் செயலாகவல்லவா இது படுகிறது?

இப்படிப்பட்ட சம்பவங்கள் எங்கே, எந்த ஜில்லாவில் நடைபெறுகிறது என்பதை இங்கு சொல்ல வேண்டுமென்பதில்லை. காரணம்; இது ஒரு ஜில்லாவில் மட்டுமல்ல மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் இப்படித்தான் அநேகமாக நடக்கிறது.

போலித்தறி ஒழிக்கப் புறப்பட்ட கதை—உண்மைத் தறிகளைக் கண்டுபிடிக்கச் சென்ற வழி—எப்படி இம்மாகாண நெசவாளர்களைப் பாதித்துவிட்டிருக்கிறது என்பதை உணர்ந்த ராஜ்ய சர்க்கார், இதுபோன்ற ஒவ்வாத முறைகளை மேற்கொண்டாவது நடைமுறையில் கையாளாமல் இருக்கவேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தாக்கீது செய்யவேண்டுமென நாம் வற்புறுத்துகிறோம்.

சர்க்கார் இம்மாகாணத்தில் ஒரு ராஜ்ய கைத்தறி கமிட்டியை அமைத்திருக்கிறார்கள் அந்தக் கமிட்டியிலுள்ளவர்களை யாவது கலந்துகொண்டு போலித்தறிகளை எப்படி ஒழிக்கலாம் எனத் திட்டம் தீட்டியிருக்கலாமல்லவா? அதுவும் செய்யவில்லை.

தனக்கு எது சரியெனப் படுகிறதோ அது ஜனங்களுக்கு நன்மை பயக்காவிட்டாலும் அவ்வழியில் செல்லுவதால்தான் மக்கள் அதை வெறுக்கிறார்கள்—ஆட்சேபிக்கிறார்கள். குறைந்த பட்சம் கைத்தறி நெசவுத் தொழில் சம்பந்தமாக எந்த நடவடிக்கையை மேற்கொள்ளுவதானாலும் சரி, ராஜ்ய கைத்தறிக் கமிட்டியைக் கூட்டி, எடுக்க உத்தேசித்துள்ள வேலைகளை விளக்கிச்சொல்லி அவர்களின் ஆலோசனையையும் பெற்று, அதை ராஜ்யத்திலுள்ள எல்லா நெசவுத்தொழில் ஸ்தாபனங்களுக்கும் அனுப்பி பொதுஜன அபிப்பிராயம் தெரிந்த பின் அதுபடி நடக்க ராஜ்ய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரும், அவரது இலாகாவும் முன்வரவேண்டுமென ராஜ்ய நெசவாளர்கள் சார்பாக கேட்டுக்கொள்ளுகிறோம்.

அப்பொழுதுதான் ஏழை நெசவாளர்கள் பல்வேறு தொல்லைகளிலிருந்தும் பாதுகாக்கப்படுவார்கள். இப்படிச் செய்வதில் பெரிய சிரமம் இருப்பதாகவும் தெரியவில்லை. ஆகவே, மேற்கொண்டாவது இந்த ஜனநாயக வழியைப் பின்பற்றி சர்க்கார் நெசவாளர்களுக்கு நல்லது செய்ய முற்படுவார்களென நாம் நம்புகிறோம்.

அன்பர்கள் அனைவருக்கும்

எமது பொங்கல் நல் வாழ்த்துக்கள்!

கியாரண்டியான சாயத்திற்கு,

மல்லி சாயச்சாலை

16/539, ரங்கே கவுண்டர் தெரு,

கோயமுத்தூர்.

(7ம் பக்கத் தொடர்ச்சி.)

தில் உற்பத்தியாகும் பருத்தியில் 60,000 பேல் வாங்க இந்திய சர்க்கார் சூடானுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர்.

அயல் நாடுகளிலிருந்து 1950 முதல் 30-6-51 வரை இறக்குமதி செய்த பருத்தியின் அளவு பேல் கணக்கில் வருமாறு:—

கிழக்கு ஆப்ரிக்கா 1,65,000, சூடான் 53,000 எகிப்து 2,08,000 யு. எஸ். அமெரிக்கா 238, ஜெரூ 12,000 பாகிஸ்தான் 5,000, இதர நாடுகள் 5,000

1951 ஏப்ரல் மே, ஜூன் மாதங்களில் மில்களின் பருத்தித் தேவையும் அதிகரித்து வந்திருக்கிறது. 1-9-50 முதல் 30-6-51 முடிய இந்தியாவில் விளையும் பருத்தி 20,61,000 பேல்களும் அயல்நாட்டுப் பருத்தி 9,05,000 பேல்களும் மில்களின்தேவைக்கு வேண்டியிருந்தது.

ஏற்றுமதி

பிரஸ்தாப காலத்தில் இந்திய சர்க்காரின் ஏற்றுமதிக் கொள்கையில் மாறுதல் எதுவுமில்லை. வங்காளம், அஸ்ஸாம், மாத்தியோ ரகங்கள் ஏற்றுமதிக்கு அனுமதிக்கப்பட்டன. வங்காள தேஷி பருத்திக்கு 1951ம் வருஷம் ஏற்றுமதி லைசென்ஸ் வழங்கிய கால வரையறை இரண்டு மாதங்கள் நீடிக்கப்பட்டது.

1-9-50 முதல் 30-6-51 வரை அயல் நாடுகளுக்கு ஏற்மதி செய்யப்பட்ட பருத்தி பேல் கணக்கில் வருமாறு:

பிரிட்டன் 26000, ஐரோப்பா 21000, ஜப்பான் 48000, யு. எஸ். அமெரிக்கா 73000 இதர நாடுகள் 6,000.

ஸ்டாக் நிலைமை.

1—9—50ந் தேதி மில்களில் 1424000 பேல்கள் ஸ்டாக் இருந்தன ஆனால் 1—9—50ல் இது 1027000 பேல்களாகக் குறைந்துவிட்டது. ஆனால் 31—1—51ந் தேதி முதல் நிலைமையில் அபிவிருத்தி ஏற்பட்டது. 30-6-51ந் தேதி 1560000 பேல்கள் இருந்தன. அது 5 மாதத்திற்குப் போதுமானதாக இருந்தது.

பருத்தி கண்ட்ரோல்.

ஜவுளிக் கமிஷனர் பருத்தி கட்டுப்பாடு சம்பந்தமாக உத்திரவு பிறப்பித்துள்ளார். அவருடைய விசேஷ அனுமதி பெறாமல் 1950—'51ம் வருஷம் சென்னை ராஜ்யத்தில் உற்பத்தியாகும் கம்போடியா பருத்தியையும் கருங்கண்ணிப் பருத்தியையும் 31-8-51 தேதிக்கு பிறகும இதரரகங்களை 31-7-51ந் தேதிக்குப் பிறகும் கொட்டை நீக்காமல் வைத்திருக்கக் கூடாதென்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேலும் 1951—'52 விளைச்சல் பருத்தியின் விலை (முந்தின வருஷத்து பருத்தி விலைக்கு அதிகமாக) கண்டி ஒன்றுக்கு ரூ. 50 ஆக நிர்ணயிக்கப்பட்டது.

பருத்தியின் தரம் பற்றியும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இது சம்பந்தமாக பருத்தி ஆலோசனை போர்டு கூறிய சிபார்சுகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டன, கிழக்கிந்தியபருத்திசங்கத்தின் அதிகாரிகளால் அத்தாட்சி (செர்டிபிகேட்) பெறவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டது.

ஸி. ஓ. 4 (பி. 40) முன்பு ராஜபாளையம் பருத்தி என்று அழைக்கப்பட்டது. பூரி 6394 பஞ்சாப் 316 எப், பஞ்சாப் 320 எப், லக்ஷ்மி எம். ஏ. 5 ஆகிய 6 ரக பருத்திகளுக்கும் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடந்த வருஷத்தில் விலைக் கட்டுப்பாட்டினின்றும் விதி விலக்கு அளிக்கப்பட்டது.

முக்கிய நிபந்தனைகளாவன: விவசாய இலாகாவினர் அனுமதிக்கும் ரகத்தைத் தவிர இதர ரகத்தை குறிப்பிட்ட பிரதேசத்

வெள்ளலூர் நெசவாளர் கூட்டுறவு சங்க மகாசபைக் கூட்டம்.

ஸ்ரீ வி. சி. விஸ்வநாதன் தலைமையில் மேற்படி சொஸைட்டியின் மகாசபைக் கூட்டம், சங்கக் கட்டடத்தின் முன்னால் அமைக்கப்பட்ட பந்தலில் 19—12—51 தேதியன்று நடைபெற்றது.

அப்போது 1950—51-ம் வருட லாபம் ரூ 17855—5—0-ஐ பைலாப்படி சொஸைட்டியின் வளர்ச்சிக்கான நிதிகளுக்கு ஒதுக்கியது போக மீதியை தறிக்கார மெம்பர்களுக்கு டிவிடெண்டாகவும், கூலியின் மீது போனசாகவும் பகிர்ந்து கொடுக்கலாமெனத் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி ஒவ்வொரு நெசவாளிக்கும் சுமார் ரூ. 100 வரை கிடைக்கலாமெனக் கணக்கிடப்படுகிறது. பின் நடந்த சொஸைட்டி நிர்வாகஸ்தர்கள் தேர்தலில் கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஸ்ரீமான்கள் வி. சி. விஸ்வநாதன் (தலைவர்), எம். நஞ்சப்பன் (உபதலைவர்), ஆர். அருணாசலம் (காரியதரிசி), எஸ். கந்தசாமி செட்டியார், ஆர். கிருஷ்ணசுவாமி செட்டியார், டி. ராமச்சந்திரன், கே. வேலுசாமி (டைரக்டர்கள்).

தேனீர் விருந்துடன் மகாசபை இனிது முடிந்தது.

தில் உற்பத்தி செய்யக் கூடாது. விவசாய இலாகாவின் மேற்பார்வையில்தான் இப்பருத்தி கொட்டை நீக்கப்பட்டு, 'பிரஸ்' செய்யப்படவேண்டும். அதன் தாம் பற்றிவிவராய இலாகாவினர் அத்தாட்சி (சர்டிபிகேட்) அளிப்பார்கள். சென்னை ராஜ்யத்தில் 1951-52-ல் உற்பத்தியாகும் கம்போடியா வி. ஒ. 4 பருத்திக்கு அத்தாட்சி அளிக்கும் திட்டம் ஒன்றை சென்னை சர்க்கார் அனுமதித்திருக்கிறார்கள். 1-8-51 முதல் இத்திட்டம் அமுலுக்குவந்தது.

வி·34 ரகப்பருத்தி உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவேண்டும். இந்த ரகப் பருத்தியை அறைக்கும் ஜின்னிங் தொழிற்சாலைகள் லைசென்ஸ் பெறவேண்டும்.

பருத்தி ஜவுளிகள்

நூல் நெசவு மில்களில் 1951-ம் வருஷத்தில் ஜனவரி முதல்ஜூன் முடிய 2,00,90,00,000 கெஜம் ஜவுளிஉற்பத்தியாகியிருக்கிறது. மெல்லிய, மிக மெல்லிய ரகஜவுளிகள் தேங்கிவிட்டபடியினால் 1951 ஆகஸ்டுமுதல் 1951 செப்டம்பர் வரை இந்த ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டதில் நாலில் ஒரு பங்கை (26 சதவிகிதம்) ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டது. ஆனால் மோட்டா ரக நடுத்தர ரக ஜவுளிகள் 10 சதவிகிதம் தான் ஏற்றுமதிக்கு வழக்கம் போல அனுமதிக்கப்பட்டது.

மோட்டா ரக நடுத்தர ரக ஜவுளிகளுக்கு ஏற்றுமதி வரி மொத்த மதிப்பீட்டில் 10 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. ஆனல் மெல்லிய மிக மெல்லிய ஜவளிக்கு ராத்தலுக்கு 2 அணா ரிபேட் அளிக்கப்பட்டது. 1—9—50 முதல் 30—6—51 முடிய 9 மாத காலத்தில் மொத்தம் 1,03,30,00,000 கெஜம் ஜவுளி ஏற்றுமதிசெய்ய பட்டிருக்கிறது.

செய்வோம் வாரீர்!

எத்தொழிலும் கூட்டுறவால் செய்வோம் வாரீர்!
இனியேனும் கூட்டுறவாய் வாழ்வோம் வாரீர்!

மண்வெட்டி, நீருட்டிக் களையும் நீக்கி,
மாணிக்கக் கதிராக்கும் மழலை உழவர்,
விண்முட்டும் புகழ்சேர்க்கும் பாரோர் வியக்கும்
விள்ளரிய விதத்தினிலே துணிகள் ஆக்கும்
பான்மையுடை நெசவாளர், மற்றும் பல்லோர்,
பாரினிலே இனிதாக வாழல் வேண்டின்,
மாண்புமிகு நல்லவழி மிளிரும் இந்தக்
கூட்டுறவே! கூட்டுறவே!! கூட்டுறவேதான்!!!
[எத்தொழிலும்]

கூட்டுறவை ஏற்றுவிடின், சமுறும் இந்தக்
கொடும்பஞ்சம் குன்றிவிடும்; கூலியும் மாந்தர்
நாட்டினிலே நல்வாழ்வை நத்துவார் காண்!
நலிவுபெறும், நஞ்சன்ன கொள்ளை மேவும்
காட்டிலுறை விலங்கொத்த கயவர் கூட்டம்
கள்ளவிலை கடிதேகும். என்றும் இங்கே
சீட்டில்லை, வரியில்லை, மணிகள் வாங்க
சிரிக்கின்ற முகங்கள்தான் காண்போமன்றோ!
[எத்தொழிலும்]

"கூட்டுறவு" "நுன்னு — நடராஜன்"

யாருக்கு வோட்டளிப்பதென
பொட்டல் புதூர் நெசவாளிகள் முடிவு.

பொட்டல் புதூர் நெசவுத் தொழிலாளர் சங்க உறுப்பினர்கள் கூட்டம் அதன் தலைவர் ஜனப் பி. எஸ் ரஹ்மான் அவர்கள் தலைமையில் 31—12—51 தேதியன்று நடைபெற்றது.

அப்போது நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் சென்னை அசெம்பிளிக்கு சுயேச்சை அபேட்சகராக நிற்கும் பாப்பாங்குளம் திரு. சொக்கலிங்கம் பிள்ளை அவர்களையும், மக்கள் சபைக்கு ஜனப் கே. டி. எம். அஹமது இபுருகிம் பி. ஏ. பி. எல்., அவர்களையும் ஆதரித்து ஆவன செய்வதென ஏகமனதாக முடிவு செய்யப்பட்டதென சங்க செயலாளர் ஏ. கே. ஏ. சாமி அறிவிக்கிறார்.

கைத்தறி ஜவுளிக்கு!

[ஈ. கு. விவேகானந்தன்]

தற்சமயம் கைத்தறி ஜவுளிக்கு மார்க்கெட்டில் கிராக்கியே இல்லாதிருப்பதைப் பார்த்தால் கூடிய விரைவில் ஜவுளிக்கு சவக்குழி ஒன்று தோண்டியாகவேண்டுமா என்ற ஐயம் எழுகிறது. கைத்தறி ஜவுளிகள் உள்நாட்டில் செலாவணி என்பதே இல்லாமலிருக்கிறது. வெளி நாடுகள் வெறுத்துவிட்டன. மில் துணிகள் அனைத்தும் மண்டியிட்டு தங்கள் விலைகளைக் குறைத்து மார்க்கெட்டில் கொண்டுவந்து குவிக்கின்றன. இந்த இடர்பாட்டில் தறிக்காரன் வாழ வழியின்றி தரித்திரத்தையே ஆடையாக அணிந்துவிட்டான். கைத்தறி ஜவுளி ஸ்தாபனங்கள் எல்லாம் கைம்பெண் நிலையை எட்டிப் பார்த்துவிட்டன. இத்தகைய அவதியிலே ஆள்பவர்கள் தங்கள் தேர்தல் தோசையைத் திருப்புவதிலேயே கவனமாகயிருக்கிறார்கள். மற்ற கட்சிகளெல்லாம் தேர்தலில் வெற்றிபெற்றால் அவரவர் ஆட்சியில் நாட்டில் பாலும் தேனும் கலந்து ஓடும் என பிரச்சாரம் செய்கிறார்கள். அதோடு சர்க்கரையிலே பந்தல் போட்டு அதில் தங்கள் திறமையால் தேன் மாரி பொழியவைக்கப் போவதாக வாய் விரிக்கிறார்கள். மேலும் வெற்றி தங்களுடையது என்று கணிக்கப்பட்டால தறி ஒன்றுக்கு பிரதி மாதம் ஒரு பேல் நூல் அலாட் செய்வதாகக்கூட அளக்கிறார்கள்.

சில மாதங்களுக்கு முன்பு சென்னை வந்த மத்திய சர்க்கார் மந்திரி ஸ்ரீ மெஹதாப், "கைத்தறிக்கு கூடிய விரைவில் அபாயம் வரவிருக்கிறது. இதற்கு மார்க்கெட் எங்கு இருக்கிறது என்று எனக்கு தோன்றவில்லை. ஆகையால் அந்த கவலையும் மண்டையிடியும் எனக்கு இப்போதே ஏற்பட்டு விட்டது' என்று அபாய அறிவிப்புசெய்து விட்டுபோனார்.

அதற்குப்பிறகுஇதன்பிரச்னை என்னஎன்பதை அவரும்எடுத்துக் கொண்டவரல்ல. வெளி நாடுகளுக்கு ஏற்றுமதிஉண்டா? கிடையாது! "ஓ சகோதர வெளி நாடுகளே! உங்களுக்கெல்லாம் எங்கள் நாட்டின் கைத்தறி ஜவுளி வேண்டுமா?" என்று கோரிக்கை விடுத்துக் கேட்டால் அவைகளெல்லாம் கோபத்தோடு "தேவையில்லை" என்ற தங்கள் விளம்பரப் போர்டுகளைக் காட்டுகின்றன. பர்மாவைக் கேட்டால் அது வேண்டாம் என்பதோடு, தனது நொய் அரிசியை அனுப்பட்டுமா என்கிறது. இலங்கையைக் கேட்டால் முதலில் இங்குள்ள இந்தியர்களை அங்கு வரவழைத்துக்கொள் பிறகு தான் மற்றதெல்லாம் என்று நம்மை மடக்கிப் பேசுகிறது. மலேயாவைக் கேட்டால் இங்குள்ள இந்தியர்களுக்கெல்லாம் முதலில் மரண மேடை கட்டி முடிக்க வேண்டும். அதன்பின்பு தான் பிரிட்டிஷார் பிரியம்போல் எதையும் செய்வார்கள் என்று கூறுகிறது. பாகிஸ்தானைக்கேட்டால் முதலில் தான் பலவந்தமாகக் காதலிக்கும் காஷ்மீர் பிரச்னை தீரட்டும்! பின்பு வேண்டுமானால் உன் கைத்தறி ஜவுளியைப் பற்றி பேசலாம் எனறு பதிலறைகிறது.

வெட்கம்! சுதந்திர நாட்டில் ஒரு தொழிலின் நிலைமை இவ்வளவு கேவலமா? இன்று இந்த ஒரு தொழில் தான் இப்படிப் பாதிக்கப்பட்டிருக்கிறதா? அல்லது வேறு தொழில்களும் இதே நிலையை யொட்டித் தானிருக்கிறதா? விலைகள் கூடிய அன்று பெரும்பாலும் சொஸைட்டிகளெல்லாம் சொகுசாகயிருந்தன. இன்று விலைகள் இறங்கிவிடவே அதே சொஸைட்டிகள் சோர்ந்து இருக்கின்றன. அன்று விலை ஏறுவது வியாபாரிகளுக்கு விருந்

(14ம் பக்கம் பார்க்க.)

பொங்கல் புதுநாளில் நண்பர்களுக்கு
எமது மங்கள நல் வாழ்த்துக்கள்! ★

ரத்னா கலர் ஒர்க்ஸ்

20/17, சாமையர் புது வீதி, கோயமுத்தூர்.

★

சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு
சொஸைட்டியாரால் அங்கீகரிக்கப்பட்டவர்கள்.

S. பஞ்சரத்னம், உரிமையாளர்.

சென்னை ராஜ்ய சாய, அச்சுத் தொழிற்சாலையாளர் சங்கம் அமைக்கப்பட்டது

விற்பனை வரிக்கெதிராக நடவடிக்கை எடுக்க ஏகோபித்த முடிவு!

சேலம், டிசம்பர். 30—

சேலம் சாயத் தொழிற்சாலையாளர் சங்கக் கட்டிடத்தில் மேற்படி மத்திய சங்க அமைப்புக் கூட்டமொன்று, கோவை 'கைத்தறி' ஆசிரியர் ஸ்ரீ எம்.கே. சாமி அவர்கள் தலைமையில் 30-12-51 தேதியன்று நடைபெற்றது. அது சமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன

கூட்டத்திற்கு மங்களூர், ஈரோடு, திருப்பூர், கோவை மற்றும் ராஜ்யத்தின் பல பாகங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

1. மாகாண சங்கத்திற்கு "The Madras State Textile Dyers' & Printers' Association" (மதராஸ் ஸ்டேட் டெக்ஸ்டைல் டையர்ஸ் & பிரின்டர்ஸ் அசோசியேஷன்) என்று பெயர் வைக்க இக்கூட்டம் முடிவு செய்கிறது.

2. மேற்படி சங்கத்தின் காரியாலயத்தை திருப்பூரில் நிறுவுவதென இக்கூட்டம் முடிவுசெய்கிறது.

3. சென்னை ராஜ்ய டெக்ஸ்டைல் டையர்ஸ & பிரின்டர்ஸ் அசோசியேஷனுக்குத் தலைவராக திருப்பூர் ஸ்ரீ பி. ஜி. பாலசுப்ரமணியம் அவர்களையும், உபதலைவராக சேலம் ஸ்ரீ வி. கே. ஆர். ராமலிங்கம் செட்டியார் அவர்களையும், பொதுக்காரியதரிசியாக மதராஸ் ஸ்ரீ ஏ. கே. வைத்யநாதன் அவர்களையும், காரியதரிசிகளாக ஈரோடு ஸ்ரீ சி. அம்பாயிரம், திருப்பூர் எம். கே. சின்னப்ப கவுண்டர் ஆகியவர்களையும், பொக்கிஷதாரராக கோவை ஸ்ரீ ஏ. ஆர். வெங்கடராமய்யர் அவர்களையும். கௌரவ ஆலோசனையாளராக கோவை 'கைத்தறி' ஆசிரியர் ஸ்ரீ எம். கே. சாமி அவர்களையும் கமிட்டி அங்கத்தினர்களாக திருவாளர்கள் சென்னை வி. என். குமாரசாமி, ஏ. வி. ஜெயசந்திரன் சேலம் ஆர். வெங்கடேசன் ராசிபுரம் வி. எஸ். ஆர். சுப்பராய செட்டியார், திருச்செங்கோடு பி. நாகப்பன், கஞ்சாவூர் டி. எஸ். கிருஷ்ணமூர்த்தி. கோயமுத்தூர் எஸ். பஞ்சரத்னம், ஈரோடு டி. பி. நாச்சிமுத்துக்கவுண்டர், மங்களூர் என். ரகுநாத காமத், மதுரை ஆர். என். ஆச்சாலையா கே. ஆர். ராமச்சாரி ஆர். ஆர். ஸ்ரீனிவாஸ், எம். ஆர். சுப்பய்யர், பி. எம். சுந்தர கோபால், வட ஆற்காடு பி. ஆர் ஜகன்னாத ராவ், திருச்சிராப்பள்ளி கே. பி. ஷேக் முகம்மது ஆகியவர்களை தேர்ந்தெடுப்பதுடன், மேற்கொண்டும் 7 பேரை கமிட்டியில் சேர்த்துக் கொள்ளவும் இக்கூட்டம் கமிட்டிக்கு அதிகாரமளிக்கிறது.

4. சென்னை மாகாண சாய அச்சுத் தொழிற்சாலையாளர் முதல் மகாநாட்டுக் கணக்கிலிருந்து மீதியாகும் தொகையை மாகாண சங்கத்திற்கு கொடுத்துவிடும்படி மகாநாட்டு வரவேற்பு கமிட்டியாரை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது, கிடைக்கும் தொகையை விற்பனை வரி நீக்குவதற்கான சகல முயற்சிகளுக்கும் உபயோகிக்க இக்கூட்டம் தீர்மானிக்கிறது

5. ராஜய சங்கத்தில் மெம்பராக சேரும் சங்கங்களுக்கு இணைப்பு கட்டணம் ஆண்டுக்கு ரூ 50ம், பிரவேசக்கட்டணம் ரூ 10–ம் வசூல்செய்ய கூட்டம் தீர்மானிக்கிறது. தனிப்பட்ட தொழிற்சாலை நபர் மெம்பர்களுக்கு ஆண்டு சந்தா ரூ. 15-ம் பிரவேச கட்டணம் ரூ. 5ம் வசூல் செய்வதென கூட்டம் தீர்மானிக்கிறது.

6. சங்க நிர்வாகஸ்தர்கள் உடனே சங்க வேலைகளை நடத்த கமிட்டி அதிகாரமளிக்கிறது.

7. சங்கத்தின் சட்டதிட்டங்களை வகுக்க கோவை ஸ்ரீ எஸ். பஞ்சரத்னம் அவர்களையும், கோவை "கைத்தறி" ஆசிரியர் ஸ்ரீ எம். கே. சாமி அவர்களையும் தலைவர் ஸ்ரீ பாலசுப்ரமணியம் அவர்களையும் கொண்ட சப் கமிட்டி நியமிக்கலாமாய் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

8. சங்க அங்கத்தினர்களுக்கு விற்பனை வரி சம்பந்தமாக ஓர் வக்கீலை சென்னையில் ஏற்பாடு செய்து சட்ட சம்பந்தமான பூர்ண உதவியளிக்க மாகாண சங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமாய் தீர்மானிக்கிறது.

9. கோயமுத்தூருக்கு வரும் கட்டுப்பாடு பொருள்கள் டைரக்டரை சந்தித்து குறைகளைத் தெரிவித்து பரிகாரங்கள் தேடகூட்டம் முடிவு செய்கிறது.

10. சென்னை ராஜ்ய கைத்தறி கமிட்டியிலும் ஜில்லா கைத்தறி போர்டுகளிலும் நமது சங்கத்திற்கும் பிரதிநிதித்வம் வழங்க வேண்டுமென சர்க்காரை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

ஸ்ரீ சி. அம்பாயிரம் அவர்கள் வந்தனோபசாரம் கூற கூட்டம் முடிவு பெற்றது.

உயிர் தப்பியது!

சங்கர சுப்பிரமணியம்.

லட்சுமி ஓடோடி வந்து அந்தச் செயலைப் பற்றிச் சொன்னதும் நான் கல்லாலடித்து வைத்த சிலைபோன்று ஆகிவிட்டேன். என்னால் நம்பவே முடியவில்லை. இப்படியும் நடக்குமா என எண்ணித் திடுக்கிட்டேன்.

என் அம்மா சந்திராவைப் பனிரெண்டு வயதில் என்னிடம் ஒப்படைத்துவிட்டு இறந்தாள். அவளை நான் கண்ணின் கருவிழிபோல் அன்பாக நேசித்து வளர்த்தேன். அவள் பிறந்த நாளிலிருந்து இன்றுவரை அவள் கண்களில் ஒரு சொட்டு நீர் வர நான் பார்த்ததில்லை. மனைவி லட்சுமியும் என் தங்கை சந்திராவைப் பிரியமுடனேயே நேசித்தாள்.

"அண்ணா" என அவள் என்னை அன்போடு அழைக்கும் அந்தச் சொல்லில் என்ன அன்பு! சகோதர ரத்த வாஞ்சை!

ஃ ஃ ஃ

சந்திரா பருவத்தில் கண்டோர் மயங்கிவிடும் கட்டழகைப் பெற்றிருந்தாள். அவளின் இனிய சுபாவமே அவளின் அழகை மென்மைப்படுத்தியது. சந்திரா ஸ்கூல் பைனல் படித்துக்கொண்டிருந்தாள். அந்த சமயத்தில்தான் கடம்பவனம் வந்து சேர்ந்தான். அவன் ஒரு பி. ஏ. மாணவன் மட்டுமல்ல; சிறந்த சிறுகதை எழுத்தாளனும் கூட. அவன் எங்கள் வீட்டு முன் மாடியிலிருந்த அறையை வாடகைக்கமர்த்திக் கொண்டு காலேஜில் வாசித்துக் கொண்டிருந்தான்.

நல்ல சிவப்பு நிறம், சுருண்டு நெற்றியில் தவழும் கரிய கேசத்துடன் கூடிய களை நிறைந்த முகமும், கட்டுமஸ்தான தேக வனப்பும் வாய்ந்தவன்.

ஒருநாள் நான் ஆபீசிலிருந்து வரும்போது சந்திரா மாடியறையில கடம்பவனத்துடன் ஏதோ பேசிக்கொண்டிருந்தாள். எனக்கு ஆச்சரியமாகவும், ஆத்திரமாகவும் இருந்தது அக்காட்சி. ஏனெனில் சந்திரா நாணமே உருக்கொண்டவள். எந்த ஆண்களிடமும் சகஜமாக பேசக்கூடிய சுபாவம் அவளுக்கு அறவே கிடையாது.

அவள் மாடியைவிட்டுக் கீழே வந்ததும், "அந்தப் பையனிடத்தில் என்ன பேசிக்கொண்டிருந்தாய்" என பதட்டத்தோடு கேட்டேன். ஆங்கிலப்பாடத்தில் ஏதோ ஒரு சந்தேகத்தைக்கேட்டதாக அவள் என்னிடம் சொன்னாள், ஆனால் அவள் கடம்பவனத்திடம் பாடம் கேட்கவில்லையென்பதை அவள் கரத்தைப்பற்றி நின்ற கதைப்புத்தகமே சொல்லிற்று.

சந்திராவுக்குக் கதை என்றால் போதும். கடம்பவனமோ கதை செய்வதில் கைதேர்ந்தவன் அவன் கதைகளைக் கேட்டு தன் உள்ளத்தையே உவகையாக அவனுக்குக் கொடுத்துவிட்டாள் சந்திரா. புத்தகங்களில் படித்து ரசிப்பதைவிட கடம்பவனத்தின் கனிவாயாலேயே சொல்லக் கேட்பதில் அவளுக்கு இன்பம் தோன்றியது. காலேஜிலிருந்து வரவேண்டியது. கடம்பவனத்தோடு சென்று பேசிக்கொண்டிருக்கவேண்டியது. இரவில் பாடங்களை அவனோடு படித்துவிட்டு படுக்கைக்குப் பதினொரு மணிக்கே செல்வாள் சந்திரா.

என் மனைவி லட்சுமிக்கு இது ஒன்றும் பிடிக்கவில்லை. அவளுக்கும் சந்திராவைக் கண்டிக்க தைரியமில்லை, நான்தான் அவளைச் சமாதானப்படுத்த "மாணவர்கள்தானே, பாடங்களை ஒருவருக்கொருவர் கேட்டுத் தெரிந்துகொள்ள கூட்டாகப் படிப்பதுதான் நல்லது" எனச் சொல்லுவேன்.

கல்லூரி விடுமுறை நாட்களில் கடம்பவனம் ஊருக்குச் சென்று திரும்பி வரும்வரை, சந்திரா நாதமற்ற வீணைபோலேயிருப்பாள். ஒருவரை ஒருவர் பிரியமுடியா அன்பு கொண்டிருக்கின்றனர் என்பது அவர்களது செயலும், பேச்சும் நிரூபித்தது. ஆண்டுக் கடைசிப் பரீட்சை

முடிந்தது. அன்று இரவு பெட்டி படுக்கைகளைக் கட்டிக்கொண்டிருந்தான் கடம்பவனம். சந்திரா துடுப்பை இழந்த கலம் போல கண் கலங்கி அவனது அறையில் நின்றுகொண்டிருந்தாள். "இனிமேல் நீங்கள் வரமாட்டீர்களா?" என எல்லைமீறிய துக்கத்துடன் சந்திரா கேட்டாள். "என் படிப்புத்தான் முடிந்துவிட்டதே; இனி நான் தங்கமுடியுமா?" எனக் கடம்பவனம் பதில் சொன்னான்.

"அப்படியானால் நாம் இவ்வளவு நாளும் சந்தித்துப் பழகியதெல்லாம் வீண் தானா?" என்றாள் சந்திரா.

"கவலைப்படாதே சந்திரா, நான் இங்கு தங்கமுடியாவிட்டாலும், அடிக்கடி வந்து உன்னை சந்திக்கிறேன். கடிதமும் போடுகிறேன்." எனக் கடம்பவனம் எவ்வளவோ சமாதானம் கூறினான்.

ஃ ஃ ஃ

விடைபெற்றுச் செல்ல கடம்பவனம் வந்தான். லட்சுமியிடமும் என்னிடமும் விடை பெற்றுக்கொண்டு, சந்திரா பக்கம் திரும்பி "நான் போய் வரட்டுமா" என்றான்; சந்திரா நாங்கள் நிற்பதைக்கூட மறந்து ஓவென சத்தமிட்டு அழத் தொடங்கிவிட்டாள்.

"சந்திரா, இன்னும் ஒரு மாதத்திற்குள் கடம்பவனத்தோடு வாழ்க்கை நடத்தப்போகிறாய் அதுவரையில் அவனைப் பிரிய முடியவில்லையா உனக்கு" என்று சொல்லி, என் சட்டைப் பையிலிருந்த கடிதத்தை எடுத்துக் கடம்பவனத்திடம் கொடுத்தேன்.

இதைக்கேட்டதும் அனைவரும் ஆச்சரியப்பட்டனர். கடம்பவனம் சந்திராவையே விரும்புவது உண்மையானால் அடுத்தமாதம் முதல் முகூர்த்தத்திலேயே கலியாணத்தை நடத்தி விடலாம் என அவனுடைய தகப்பனார் எனக்கு எழுதியிருந்த கடிதமே அது.

கடிதத்தைப் படித்து முடித்த கடம்பவனம் நாங்கள் நிற்பதைக் கூட மறந்து, சந்திராவின் கைகளைப் பற்றி சந்தோஷத்தால் குலுக்கினான்.

ஃ ஃ ஃ

சந்திரா, கடம்பவனத்தின் மனைவியாகி விட்டாள். அவள் புக்ககத்திற்குப் புறப்பட்ட பொழுது என் கண்கள் கலங்கின. லட்சுமி ஏங்கி ஏங்கி அழுதாள்.

புக்ககத்தில் சந்திரா, கடம்பவனத்தின் உயிராகவே திகழ்ந்தாள். அந்த இளம் தம்பதிகளுடைய அன்பை நான் அங்கு சென்றிருந்தபோதுதான் பார்த்தேன். அவர்களிடையே இருந்த பாந்தம் என்னைப் பரவசமாக்கியது.

சரியாக ஆறு மாதங்களுக்குப் பிறகு கடம்பவனத்திற்குச் சென்னையில் வேலை கிடைத்திருப்பதாகவும், வரும் திங்கட்கிழமை புறப்படுவதாகவும்; எனக்குக் கடிதம் வந்திருந்தது. நானும், லட்சுமியும் அவனை அனுப்பிக்கொடுப்பதற்காகச் சென்றிருந்தோம்.

கடம்பவனம் புறப்படத் தயாராகி விட்ட பிறகு சந்திரா அடக்கமுடியாது விம்மி விம்மி அழ ஆரம்பித்து விட்டாள். கடம்பவனமும், மற்றவர்களும் எவ்வளவோ ஆறுதல் சொல்லியும் அவளின் அழுகை மட்டும் நிற்கவேயில்லை.

புத்தாடை அணிந்து பொன்அணி பூட்டி
புதுப்பானை வைத்துப் பொங்கல் பொங்கி
இன்பம் எய்தும் இப்பெரு நாளில்
எல்லோருக்கும் எமது இனியநல் வாழ்த்து!

உயர்வான சாய, அச்சு வேலைகளுக்கு

ஸ்ரீ வெங்கடேசா கலர் ஒர்க்ஸ்

76, மிஷின் தெரு, :: திருப்பூர் S. I.

"பாவம் சிறுசுதானே; புருஷனை விட்டுப் பிரிய முடியவில்லை. கொஞ்ச நாட்கள் அவள் அண்ணனிடம் விட்டுவையுங்கள்" என சந்திராவின் அத்தை கூறினாள்.

கடம்பவனத்திற்கும் அவன் தாயார் சொல்லியது சரியெனப்பட்டது. சந்திராவை என்னுடன் அழைத்துச் செல்லும்படி சொல்லிவிட்டு அவன் சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டான்.

வாரம் தவராது கடம்பவனத்திடமிருந்து சந்திராவுக்கு கடிதங்கள் வந்துகொண்டேயிருந்தன. கடிதங்கள் எழுதுவதில் சந்திராவும் சலிக்கவேயில்லை. தன் அன்பு ஆவல் சகலவற்றையும் பக்கம் பக்கமாக எழுதியனுப்பிக் கொண்டிருந்தாள். நாட்கள் வளர்ந்து; எட்டு மாதங்களைத் தாண்டி ஓடிவிட்டன.

ஃ ஃ ஃ

பக்கத்துக் கிராமத்தில் நடைபெற இருந்த கலியாணத்திற்கு அன்று நானும், லட்சுமியும் போகவேண்டியிருந்ததால், சந்திராவுக்கு ஒரு பெண் துணையொன்றை ஏற்பாடு செய்துவிட்டுப் போய்விட்டோம். முகூர்த்தம் முடிந்ததும் சந்திரா தனியாக இருப்பாளேயெனநானும், லட்சுமியும் உடனே புறப்பட்டு மறுநாள் அதிகாலையில் வீட்டிற்கு வந்து சேர்ந்தோம்.

வீட்டின் முன் கதவு பூட்டப்பட்டிருந்தது. சந்திரா குளத்திற்குச் சென்றிருக்கலாமென எண்ணி என்னிடமிருந்த சாவியால் கதவைத் திறந்தேன். அன்று பகல் பதினொன்றாகியும் சந்திரா வரவேயில்லை. எனக்கு சந்தேகம் அதிகரித்தது. துணைக்கு விட்டுச் சென்றிருந்த அம்மாவை அழைத்துக் கேட்டேன்.

அவள், "எனக்கு இரவு பனிரெண்டு மணிகழித்தான் வர சந்தர்ப்பம் கிடைத்தது. நான் வந்து கதவைத் தட்டினேன். உள்ளே ஏதோ ஆம்பிளை பேசறதுபோல சத்தம் கேட்டது. உங்கள் தங்கையும் தனக்குத் துணை வேண்டாமென்றும், வீட்டிற்குப் போகும்படியும் கூறியதால் நான் திரும்பிவிட்டேன். மேற்கொண்டு என்ன நடந்ததென்று எனக்குத் தெரியாது" என்றாள்.

நாம் இல்லாதபோது, சந்திராவுடன்—அதுவும் நடுநிசியில் ஒரு ஆண் பேசிக்கொண்டிருந்தானா? எனக்கு எல்லாம் மர்மமாகவே இருந்தது. இதைப்பற்றி மட்டும் நான் யாரிடமும் பிரஸ்தாபிக்கவில்லை. ஆனால் மறைமுகமாக தேடிக்கொண்டேயிருந்தேன் சந்திராவை.

மூன்று நாட்கள் கழித்து சந்திரா வந்து சேர்ந்தாள். "எங்கே போயிருந்தாய்" எனக் கேட்டேன். அவள் தடுமாற்றத்துடன் மதுரைக்குத் திருவிழாவுக்குப் போனதாகச் சொன்னாள். அவள் கூறியது அவ்வளவும் பொய் என்பது அவள் கூறிய தினுசிலிருந்து தெரிந்தது.

"திருவிழாவுக்குப் போனவள் மூன்று நாளாக அங்கு என்ன செய்தாய்"

"ரயிலோ, மோட்டாரோ கிடைக்கவில்லை, திருவிழாக் கூட்டம் அதிகமாக இருந்தது"

அவள் பதிலில் துளி கூட எனக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. "எப்படியானாலும் நீ யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் சென்றது மிகவும் பிசகு" என்று மட்டும் சொல்லி, அவளைக் கண்டித்தேன். மேலும் மேலும் அவளைக் கேள்வி கேட்க ஏனோ மனம் ஒப்பவில்லை.

ஃ ஃ ஃ

ஸ்ரீவில்லிப்புத்தூர் நெசவாளர்

கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்

***No. A. 1601,* ஸ்ரீவில்லிப்புத்தூர்**

பொதுமக்களின் நலனே குறிக்கோளாகக்கொண்டு உடுக்கமெல்லியதும் கவர்ச்சிகரமான பேட்டு தினுசுகளிலும், வேட்டி துண்டு ரகங்களும் எல்லா அகலங்களிலும் காடா பீசுகளும் ஏராளமாகத் தயாரிக்கிறோம்.

கல்கத்தா மார்க்கெட்டுக்கு ஏற்ற 20s & 40s நூலில் 2x9, 2x10 ஜோடி ரகங்கள் கைவசம் உள்ளன. மொத்ததேவைக்கு எழுதுங்கள். முன் ஒப்பந்தம்செய்து கொள்ளலாம்.

தற்சமயம் விலைமிகவும் குறைத்துள்ளோம்! தேவைக்கு எழுதுங்கள்!!

A. K. ஞானியார், செயலாளர். P. குருசாமி, தலைவர்.

நாட்கள் ஓடிக்கொண்டேயிருந்தன. இருந்தாலும் "சந்திரா மூன்று நாள் தனியாகச் சென்றது" மட்டும் என் மனதை உறுத்திக்கொண்டேயிருந்தது.

நாளாக ஆக சந்திராவின் நடை, தோற்றம் எல்லாவற்றிலுமே மாறுதல் கண்டது. முகம் வெளுத்தது. உடல் தளர்ந்து சாணைப்பட்டது. இதைப் பற்றி நான் ஒன்றும் நினைக்கவில்லை. அன்றுதான் லட்சுமி "உங்கள் தங்கை கர்ப்பமாக இருக்கிறாள்" என்றாள்.

என் ரத்தம் சூடேறியது. "உண்மையாகவா" என இரைந்தேன்.

"நிஜந்தான். அவள் மூன்று மாத கர்ப்பிணி. இது உண்மை. நான் கூட அவளைக் கடிந்துகொண்டேன்" என்றாள்.

எனக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. இதைப்பற்றி சந்திராவிடம் ஒன்றும் கேட்கவேண்டாம் என்று மட்டும் லட்சுமியை எச்சரித்தேன். அன்று இரவு எனக்கு தூக்கமே பிடிக்கவில்லை. கடப்பவனமும், சந்திராவும் இருந்து வந்த அன்புக் காட்சிகள் என் மனதில் நிழல் படம்போல் தோன்றி மறைந்தன. சந்திரா கணவனுக்குத் துரோகம் செய்தாள் என என் மனது கேள்வியை எழுப்பியது. மூன்று மாதங்களுக்கு முன் எவனோடோ ஓடிவிட்டு என்னிடம் தைரியமாகப் பொய்யல்லவா சொல்லியிருக்கிறாள் என மனது எண்ணியது. பாவம்; பருவம் தவறான வழியில் அவளை இழுத்துச் சென்றிருக்கிறது. எவனோ சந்தர்ப்பம் பார்த்து சந்திராவைக் கெடுத்துவிட்டான். இப்படிப் பலவாராக சிந்தித்தேன்.

வேலைகளெல்லாம் முடிந்து படுக்கைக்கு வந்த லட்சுமி, "என்ன யோசிக்கிறீர்கள்? ஏதாவது வழி பண்ணலையா" என்று கேட்டாள்.

"என்ன செய்வது?" என்றேன்.

"மருந்து கொடுத்து கர்ப்பத்தைக் கலைத்துவிட வேண்டியதுதான்" என்றாள்.

கருவைச் சிதைத்துவிட்டால் என் தங்கையின் அவமானம் அழிந்துவிடுமா? மருந்தும் யாரிடமாவது கேட்டுத்தானே ஆகவேண்டும். அது ஊரெல்லாம் பரவினால் என்னாவது. மருந்து கொடுத்தும் கர்ப்பம் சிதையாவிட்டால்? கணவனின்றிக் குழந்தையா........சீ சீ வீணாக ஒரு சிசுவைக் கொலை செய்வதா. அதற்கு அவளையே கொலைசெய்துவிட்டால்........... அவள் இறந்ததற்குக் காரணம் காலரா என்று சொல்லிவிட்டால் போகிறது.

மனதைத் திடப்படுத்திக் கொண்டேன், எனது தீர்க்கமான முடிவுக்குச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஃ ஃ ஃ

நேசமாக வளர்த்த என் தங்கையை நானே கொலை செய்யத் துணிந்துவிட்டேன். இன்னும் சிறிது நேரத்தில் அவள் தன் பாபச் செயலுக்கு பிராயச்சித்தம் தேடிக் கொள்ளுவாள். அந்த நிமிடம்வரை அவளை சந்தோஷமாக வைத்திருக்கவேண்டாமா?

விடிந்ததிலிருந்து அவளிடம் கலகலப்பாகப் பேசினேன். இனிய பட்சணங்கள் வாங்கிக் கொடுத்து அவளைத் திருப்தி செய்தேன். விலையுயர்ந்த பட்டுப் புடவை வாங்கி சந்திராவை அணியச் செய்தேன். போட்டோ ஸ்டுடியோவுக்குப் போய் நானும், சந்திராவும், லட்சுமியுமாக இருந்து போட்டோ பிடித்துக் கொண்டோம்.

ஃ ஃ ஃ

இன்று இரவு அவளைக் கொன்றுவிடப் போகிறேன். அவள் மீதுள்ள வெறுப்பால் அல்ல. கொல்ல நினைக்கும் இந்த நிமிடத்தில்கூட அவள் மீதுள்ள அன்பில் சிறிதுகூடக் குறையவில்லை.

பொங்கல் நன்னாளில் எமது

இனிய நல்வாழ்த்துக்கள்

குடும்ப கவுரவம், மானம் இவைகளைக்காக்க என் உயிருக்கு உயிரான தங்கையைப் பலியிடப் போகிறேன்.

குறிப்பிட்ட நேரம் வந்தது. என் தங்கை குடிப்பதற்காக வைத்திருக்கும் பால் இருக்கு மிடம் சென்றேன். எனது உடல் பட படத்தது. "அண்ணா, என்னைக் கொல்லவா போகிறாய்?" என என் தங்கை என்னைக் கேட்பது போலிருந்தது. என் உடன்பிறந்த பாசமும், கௌரவ உணர்ச்சியும் போட்டியிட்டன. பிறந்ததிலிருந்து தோள்மீது போட்டு விளையாடினேன். மழலை மொழிகேட்டு மகிழ்ந்தேன். படிக்க வைத்தேன். அவள் விரும்பிய கணவனுக்கே கல்யாணம்செய்துவைத்து ஆனந்தமடைந்தேன். பிறந்ததிலிருந்து அன்பும், ஆனந்தமும், ஆறுதலும் தந்த என் தங்கையை நானா கொல்லப் போகிறேன்? சீ! எவ்வளவு மதியீனமாக நடந்துகொண்டேன்!

சிறிது பின் வாங்கினேன். ஆனால், மான உணர்ச்சி திடீரென ஓடி வந்து உடைந்த உள்ளத்திற்கு ஒட்டுப்போட்டுவிட்டது. "தங்கை பாசத்தைத் எண்ணி தயங்கி நிற்கிறாயே, நாளை அவளுக்குக் குழந்தை பிறந்துவிட்டால், தெருவில் நடமாட முடியுமா உன்னால்? உன் மைத்துனன் கண்களில்தான் நீ விழிக்க முடியுமா?"

மீண்டும் உறுதியடைந்தது என் மனம். என்னையறியாமலேயே என் கைகள் பாலில் விஷத்தைக் கலக்கி விட்டன. அதற்குமேல் என்னால் நிற்கமுடியவில்லை. வெளியே ஓடினேன். அந்த சமயம் தபால்காரன் ஒரு கடிதத்தைத் தந்துவிட்டுச் சென்றான். நானிருந்த நிலையில் மற்றெதையும் கவனிக்க முடியாமல் கடித்த்தைப் பெற்றுக் கொண்டு குளக்கரைக்குச் சென்றேன்.

அலக்கழித்த உள்ளத்தோடு நேரத்தைக் கணக்கிட்டுக்கொண்டிருந்தேன்! "இதற்குள் குடித்திருப்பாள்" என முணகியது என் வாய். திடீரெனக் கடிதம் ஞாபகத்திற்கு வந்தது. அதைப்படித்துப் பார்த்தேன். சந்திராவுக்கு கடம்பவனம் எழுதியிருந்தான்.

"கண்மணி சந்திராவுக்கு, உன் கடிதம் கிடைத்தது. நம் குலம் சிறப்படைய ஒரு ஜோதி உதயமாவதைக்குறித்து மகிழ்ச்சியடைகிறேன்..." இதைப் படித்ததும் என் உணர்ச்சி பெருகியது. தன் நிலைமையைச் சந்திராவே தெரியப்படுத்தியிருக்கிறாள்! எனக்குப் புதிராகவே பட்டது. எனக்கென்று வேறு ஒரு கடிதம் அதிலேயே இருப்பது தெரிந்தது. அதை எடுத்தேன்.

"அன்புள்ள அத்தானுக்கு, சிலநாட்களாகத் தாங்கள் சந்திராவைப் பற்றி தவறாக எண்ணுவதாய் சந்திரா தெரிவித்திருந்தாள். அவளைப்பற்றி சில உண்மைகளை எழுதியிருக்கிறேன். படித்த பிறகாவது அவளைப்பற்றி நல்ல அபிப்பிராயம் கொள்வீர்களென நம்புகிறேன்.

அன்று கம்பெனி ஜோலியாக நான் மதுரைக்கு வர நேர்ந்தது. சந்திராவைப் பிரிந்த நாளிலிருந்து ஒரே ஏக்கமாக இருந்த நான், மதுரையில் மூன்று நாள் தங்கவேண்டியிருந்ததால், அந்த சந்தர்ப்பத்தில் சந்திராவை எப்படியும் சந்திப்பது என முடிவு செய்துகொண்டேன்.

அன்று மாலை புறப்பட்டு இரவு பதினோரு மணிக்கு அங்கு வந்துசேர்ந்தேன். உங்கள் தெருவில்தானே எங்கள் கம்பெனி உத்தியோகஸ்தர் குடியிருக்கிறார். ஆகவே அவர் கண்ணில் படாமல் திருடனைப்போல் பதுங்கியே வீட்டிற்குவந்து சேர்ந்தேன். நீங்களும் அக்காவும் இல்லை. சந்திரா என்னைக் கண்டதும் பூரித்துப்போனாள். அவளை

மதுரைக்குக் கூப்பிட்டேன். "அண்ணா ஏசட்டுமே" என்றாள். "நான் வந்தது உன் அண்ணாவுக்குத் தெரியக்கூடாது. அவர் வாய் பொல்லாதது. நான் வந்ததை வெளியில் சொல்லி, கம்பெனி உத்யோகஸ்தன் காதுக்குள் எட்டினால் எனது வேலை என்னாவது என்று அவளுக்கு ஆறுதல் சொல்லி இரவு மூன்று மணி ரயிலில் அவளை அழைத்துக் கொண்டு மதுரை வந்து சேர்ந்தேன்.

மதுரையில் நாங்கள் கழித்த அந்த மூன்று நாளும்....... .... இன்று நமது குலவிளக்காக அவதரிக்க இருக்கிறது. ஊருக்குப் புறப்படும்போது "எங்கே மூன்று நாளாய்ப் போயிருந்தாய் என அண்ணா கேட்டால் நான் என்ன சொல்லுவது" என சந்திரா கேட்டாள். மதுரைத் திருவிழாவை காரணமாகச் சொல்லேன் என நான்தான் மடத்தனமான யோசனையை சொல்லிக்கொடுத்து வழியனுப்பிவைத்தேன்..........."

இதைப் பார்த்தேனோ இல்லையோ விழுந்தடித்துக்கொண்டு ஓடினேன். நான் வீட்டிற்குள் வந்தபோது நல்ல வேளையாக என் தங்கை முற்றத்தில் உட்கார்ந்துகொண்டு, மதனியோடு சிரித்துப் பேசிக்கொண்டிருந்தாள்.

விறுவிறென்று பால் கிண்ணம் இருக்குமிடத்திற்குச் சென்றேன். கிண்ணம் காலியாக இருந்தது. "ஐயோ! சந்திரா பாலைக்குடித்து விட்டாளோ? எனப்பயந்தேன். லட்சுமியை அழைத்து "கிண்ணத்திலிருந்த பால் எங்கே எனக்கேட்டேன்.

"யாரோ திறந்து வைத்துவிட்டார்கள்; பல்லி விழுந்துவிட்டது. அதைச் சாக்கடையில் கொட்டிவிட்டு, சந்திராவுக்கு வேறு பாலல்லவா வாங்கிக் கொடுத்தேன்" என்றாள் லட்சுமி.

அப்பாடா எனக்கு உயிர் வந்தது.

"அண்ணா எனக்கு ஏதாவது கடிதம் வந்ததா? என்று கேட்டுக்கொண்டே வந்தாள் சந்திரா.

அவளைப் பார்த்ததும், "ஐயோ களங்கமற்ற உன்னைக் கொன்றுவிடத் துணிந்தேனே! நல்ல வேளை! கடவுள் காப்பாற்றினார்". என்றது என் உள்ளம்.

"சந்திரா" என்று அவளை அணைத்துக் கொண்டேன். அவள் ஒன்றும் புரியாமல் திகைத்தாள். என்னிடமிருந்த கடிதம் நழுவிக் கீழே விழுந்தது. லட்சுமி அதை எடுத்துக் கொண்டாள்.

வாடிக்கையாளர்களுக்கு எமது

பொங்கல் நல் வாழ்த்துக்கள்!

சென்னை கைத்தறி நெசவாளர் மாகாண கூட்டுறவு சங்கத்தாரால் அங்கீகாரம் பெற்றவர்கள்.

உத்திரவாத கெட்டி சாயம் போடுபவர்கள்

★

ஸ்ரீ சக்தி

டையிங் பேக்டரி

22/16 விட்டல்தாஸ் சேட் வீதி,

திருப்பூர் S. I.

சென்னிமலை நெசவாளர்

கூட்டுறவு சங்கம் லிமிடெட்

சென்னிமலை P. O.

எங்களிடம் 20 செ. முதல் 30 செ. வரை நூலில் எங்கள் சங்க அங்கத்தினர்களால் தயார்செய்த 5, 6, 7, 7½ கெஜம் 42, 44 அங்குல அகலங்களில கலர் சேலைகளும், வேஷ்டி, துண்டு, காடா பீஸ் ரகங்களும்

விலை சரசமாய்க் கிடைக்கும்,

கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் விசேஷ சலுகை உண்டு.

M. P. நாச்சிமுத்து, B. A., B. L.
தலைவர்.

அனைவருக்கும் எமது மங்களகரமான பொங்கல் வாழ்த்துக்கள்!

R. அம்போஜி ராவ் பான்ஸ்லே,

சாயம் & கெமிக்கல்ஸ் வியாபாரம்,

சுக்ரவாரப்பேட்டை, :: கோயமுத்தூர்.

FRANCOLOR

சப்ஸ்டாக்கிஸ்ட்:- பிரஞ்சு டைஸ் & கெமிகல்ஸ் (இந்தியா) லிமிடெட்.

- எம்மிடம், துணி, நூல், நார், ரப்பர், காகிதம், தோல், மரம் முதலியவைகளுக்கு சாயம் ஏற்றவும், அச்சுப்போடவும்
- தேவையான நெப்தால், குமா, பிரான்சால்ஸ், காலிக்கால்ஸ், நெப்த ஜோஜின்ஸ், சொலசால்ஸ், சொலாந்தரின், டைஸால், டைமண்ட், ஆஸிட், ஆஸிட் குரோம், சல்பர், பேஸிக், இனேகுரோம் கலர் & கெமிகல்சுகள் கிடைக்கும்.

உங்கள் தேவையைப் பூர்த்தி செய்யக் காத்திருக்கிறோம்.

S. No. 844 குருசாமிபாளையம் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,

(ராசிபுரம் தாலூக்கா) குருசாமிபாளையம் P. O. (சேலம் ஜில்லா.)

நேர்த்தியான ரகம்! ★ **நியாயமான விலை!**

எங்கள் சங்கத்தின் நேர்ச்சிமிக்க 1800 அங்கத்தினர்களின் சொந்தத் தறிகளில் 40s 1 × 12 × 50″ காடா காரிக்கன் பீஸ்களும், 40s 4 × 8 × 50″ கெட்டி கோத்துகளும், 20, 30, 60, 100 நெ. நூல்களில் கெட்டி கோத்துகளும், துண்டு மடிகளும், மற்றும் சேலம் புகழ் குண்டஞ்சு ரகங்களும் போற்றத்தக்க முறையில் புத்தம் புது மோஸ்தர்களில் தயார்செய்து வருகிறோம்.

★

ஏற்றுமதியாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும், கூட்டுறவு ஸ்தபானங்களுக்கும் விசேஷ சலுகைகள் உண்டு.

தேவைக்கு எழுதுங்கள். S. A. ராமலிங்கம், பிரசிடெண்டு.